Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 18 புதன்கிழமை (05.10.2011) பக்கங்கள் 16 ஓசை - 370




முகிலனின் படைப்புகள்... (02)



எண்ணெய்க்காக ஆதரித்தனர்... (03)




நாளை ஆசிரியர் தினம் (11)




வாழைச் செய்கையில் புதிய அணுகுமுறை (12)

# தென்மராட்சியில் இரண்டு பிரதேச செயலர் பிரிவு



## மக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கு நடவடிக்கை மேற்கொள்வதாக சந்திரகுமார் எம்.பி. உறுதி



யாழ்பாணத்தில் மிக நீண்ட பரந்த நிலப்பரப்பைக் கொண்டதும் அதிகளவான மக்களை கொண்டதுமான தென்மராட்சி பிரதேச செயலக பிரிவை இரண்டாக பிரிக்கும் மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின பிரதித் தலைவருமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற தென்மராட்சி பிரதேச செயலக பிரிவை இரண்டாகப் பிரிப்பது தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி பரந்த நிலப்பரப்பைக் கொணடதும் 72 ஆயிரத்து 746 மக்கள் தொகையை கொண்ட ஒரு பிரதேச செயலக பிரிவாகும் இதனால அதிகாரிகள் தங்களுடைய கடமைகளை இலகுவாக செய்துகொள்ள முடியாமலும் மக்கள் சிரமமின்றி தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் இருக்கும் அதேவேளை பிரதேசத்தின் அபிவிருத்தியையும் விரைவுபடுத்த முடியாத நிலைகாணப்படுகிறது.

எனவேதான் இந்த இடத்தில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவினை இரண்டு நிர்வாக அலகுகளாக ஆதாவது கொடிகாமத்தை மையமாக வைத்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்துறை தம்பாட்டிப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்றைய தினம் கரையொதுங்கியுள்ளது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் சுமார் 45 வயது மதிக்கத தக்கவர் எனவும் குறுநதாடி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறை நீதவான் ஜோய் மகிழ்மகாதேவா சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார். பிரேத பரிசோதனைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## இந்திய வெளிவிவகாரச் செயலர் சனியன்று கொழும்பு விஜயம்



(வொஷிங்டன்)

இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய் எதிர வரும் சனிக்கிழமை இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. எதிர்வரும் 8 ஆம திகதி கொழும்பு வரும் ஜனாதிபதி, மறுநாள் நிலைமைகளை அவதானிப்பதுடன், இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப் படும் அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதி நிதிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு திட்டமிட்டுள்ளார். ரஞ்சன் மத்தாய் இந்திய வெளி விவகாரச் செயலராக அண்மையில் பொறுப்பேற்ற பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமை சவாலை எதிர்கொள்ள சர்வதேசத்தை வெற்றிகொள்ள வேண்டும்

### என்கிறார் அமைச்சர் நிமால்



(கொழும்பு)

மனித உரிமை சவால்களை எதிர்கொள்வதற்குச் சர்வதேச நாடுகளை வெற்றிகொள்ள வேண்டும். எனினும் நாட்டின் முன்னுள்ள சர்வதேசத்தின் சவால்களை கால நிலையைப் போன்று கணிக்க முடியாதென அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மேற்குலக நாடுகளில் விஸ்தரித்துள்ள தமிழ் இடம்பெயர் சமூகம் இலங்கை தொடர்பிலான தவறான கருத்துக்களை பரப்பிவருகின்றது. முதலில் இதனை முறியடிக்கவேண்டும்.

பக்கச்சார்பாகச் செயற்படுவதால் ஐ.நா.வினதும் மனித உரிமைகள் சாசனத்தினதும் தனித்துவமே பாதிக்கும். இதுவரையில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பாரிய (15 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவியை விலக்கக் கோரி வசாவிளானில் பகிஷ்கரிப்பு

சக பாடசாலை மாணவியை பாடசாலையிலிருந்து விலக்கக் கோரி வசாவிளான மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் பகிஸ்கரிப்பு மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சம்பவமொன்று நேற்று வசாவிளானில் இடம்பெற்றுள்ளது. குறித்த மாணவியை உயர்தர வகுப்பினில் கல்வி கற்க பாடசாலை அதிபர் மறுத்து விட்டதாக கூறப்படுகின்றது. இதையடுத்து குறித்த மாணவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தினில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு தொடர்பாக இடம்பெற்ற விசாரணைகளை அடுத்து குறித்த மாணவியை உயர்தர வகுப்பினில் கல்வி கற்க அனுமதிக்குமாறு (15 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக உள்நாட்டிலிருந்து சதி



(கொழும்பு)

அரசிற்கும், பாதுகாப்புத் தரபபுகளுக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்நாட்டிற்குள் 'இருந்துகொண்டு பலர் செயற்படுகின்றனர். ஐ.நா. உள்ளிட்ட சர்வதேசத்தின் இலங்கைக்கு எதிரான சதிகளுக்கு இவரகள் தகவல்களைக் கொடுத்து வருகின்றனர் என அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச செயலாளருமான சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

பயங்கரவாதிகளுக்கும் பிரிவினைவாதத்திற்கும் துணை போனவர்களுக்கு எதிராக உள்நாட்டில் விரைவில் போர்க்குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான சட்ட அங்கீகாரம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## எரிவாயு கண்டுபிடிப்பு தேர்தல் குண்டு - ரணில்

மன்னார் கடற்பரப்பில் எரிவாயு வளம் கண்டுபிடிக்கப்பட்டுளளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளமையானது தேர்தல் வெடிகுண்டென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. 2,500 ரூபா சம்பள உயர்வு, ஜனாதிபதி முறையை அகற்றுதல் போன்ற வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது. இதே விதம் தான் இந்த எரிவாயுக் கதையுமென்று அவர் கூறினார்

## கோம்பாவில் குடியேற்றம் 67 வீடுகள் பூர்த்தியாகின

(வவுனியா)


வவுனியா மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களை குடியேற்றம் செய்வதற்காக கோம்பாவில் பகுதியில் முதற்கட்டமாக 100 வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தில் 67 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள வீடுகளின் நிர்மாணப் பணிகளும் எதிர்வரும் 15 ஆம் திகதியளவில் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோம்பாவில் பகுதியில் உள்ளக வீதிகள், பொதுக்கிணறுகள், தற்காலிக வீடுகள் மற்றும் மலசலகூடங்களை அமைக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றச் செய்திகள்

## சட்டவிரோத மண் அகழ்வு பொலிஸார் தடுத்து நிறுத்தினர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை கிழக்குப் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி மண் ஏற்றிய மூவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மண் ஏற்றிய இரு வாகனங்களும் யாழ்பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மூவர் மீதும் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மண் ஏற்றிய தாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண் ஏற்றிய நிலையில் உழவு இயந்திரமொன்றும்,லாண்ட்மாஸரர் ஒன்றும் இவ்வாறு யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் சட்டவிரோத மண் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த நபர்கள் குறித்துப் படையினர் யாழ்.பொலிஸாருக்கு கொடுத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டு வாகனங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இவ்வாறு முன்னரும் சட்டவிரோத மணல் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட பலர் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு யாழ்.நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு நீதிமன்றம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

26 கிராம் கஞ்சாவை தன்வசம் வைத்திருந்த நபருக்கு யாழ்.நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

யாழ். குருநகர்ப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போதே குறித்த நபர் தன் உடைமையில் 26 கிராம் கஞ்சா வைத்திருந்தவர் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மேற்படி வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராஜா குற்றவாளிக்கு 5 ஆயிரம் ரூபா. தண்டம் செலுத்த உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார். (எஸ்)

## அனுமதிப் பத்திரம் இல்லை 1000 ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.காங்கேசன்துறை வீதியில் வாகன அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபர் ஒருவருக்கு யாழ்.நீதவான் நீதமன்றம் 1000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது.

நேற்று யாழ்.காங்கேசன் துறை வீதியில் வாகன அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபர் ஒருவருக்கு எதிராக யாழ். போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் யாழ். நீதிமன்றத்தில் வழக்கினைப் பதிவு செய்தனர்.

இவ்வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபருக்கு 1000 ரூபா தண்டம் செலுத்த வேண்டும். இல்லையேல் ஒரு மாத சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.

## பனம் விதை நாட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 1, 50, 000 பனம் விதைகளை இந்த மாத்தில் நடுவதற்கு பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது. தென்மராட்சி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளில் நடுகை மேற்கொள்ளப்படவுள்ளது. (130)

## நவராத்திரி விழா

(ஆனைக்கோட்டை)

நவாலி முருகமூர்த்தி ஆலயத்தின் இடம்பெற்று வரும் நவராத்திரி விழாவின் இறுதி நாள் நிகழ்வு நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிற்பகல் 4.00 மணிக்கு முருகப் பெருமான் வீதியுலா வந்து மாலை 6.00 மணியளவில் கன்னி வாழை வெட்டு இடம்பெறவுள்ளது. (104)

**சிறு விளம்பரம்**

தேசிய மரபுரிமைகள் அமைச்சு

**அபிவிருத்தி உதவியாளர், தகவல் உதவியாளர்**

படிவம் விற்பனையாகிறது

யாழ்.பூபாலசிங்கம் புத்தக சாலை மற்றும் குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் விண்ணபபியுங்கள். விண்ணப்ப முடிவு திகதி : 20.10.2011 ஆகும். சி.என்.எச்.சாள்ஸ். (படிவ விநியோகஸ்தர்) C/585

## நெடுந்தீவு முகிலனின் படைப்புகள் யாழில் வெளியீடும் அறிமுகமும்



(யாழ்ப்பாணம்)

டெல்ப் மூவிஸ் அனுசரணையில் நடைபெற்ற நெடுந்தீவு முகிலனின் “குறும் படம்”, “ஆவணப் படம்”, “பாடல் வெளியீடு”, “பயணிகள் கவனத்திற்கு” என்ற கவிதை நூல் அறிமுக விழா ச.ஜெயபாலன் தலைமையில் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று மாலை 4.00 மணியளவில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில், யாழ்.ஊடக கற்கை நிலைய மாணவி சுதர்சினி வேலாயுதம் வரவேற்புரை நிகழ்த்தியதுடன், தொடக்கவுரையை தெ.துவாரகனும் நிகழ்த்தினர்.

பின்னர் தண்ணீர் குறுந்திரைப் படப் பாடல் வெளியீடு இடம்பெறறது. இத்திரைப்படத்தின் பாடல் முதற் பிரதியை எஸ்.ஜேசுதாஸனுக்கும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சட்ட ஆலோசகரும், தென்னிந்தியத் திரைப் படத் தயாரிப்பாளருமான க. செவ்வேள் வழங்கினார். இக் குறும்பட பாடல் தென்னிந்தியாவில் சிறந்த இசைக்கான பாடலாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பொன் சுகந்தன் தண்ணீர் குறும்படத்தின் நயப்புரையை நிகழ்த்தினார். நிகழ்வின் அடுத்ததாக ‘பயணிகள் கவனத்திற்கு என்ற கவிதை நூல் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறை வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைத்தார். இதன் முதற்பிரதியை கஜமுகன் ஹாட்வெயார் உரிமையாளர் E.S.P.நாகரத்தினம் பெற்றுக் கொண்டார். இக்கவிதை நூலின் ஆய்வுரையை யாழ். இலக்கிய குழுவின் தலைவர் வேலணையூர் தாஸ் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் சிறப்புரையினை கலாநிதி மணோண்மணி சண்முகதாஸ் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து தண்ணீர் குறும் படத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட செவ்வேள் வெளியிட்டு வைத்தார் இதன் முதற்பிரதியை ராஜா திரையரங்க உரிமையாளர் எஸ். தியாகராஜா பெற்றுக் கொணடார். வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள திரைப்படம் சிறிது நேரம் காண்பிக்கப்பட்டது. திரைப்படத்தின் இசையமைப்பாளரான எஸ்.ஜே. ஸ்டாலினின் உரை இடம்பெற்றது. தண்ணீர் குறும் படத்தின் கருத்துரை சூரியன் எப்.எம்.மின் சிரேஷ்ட அறிவிப்பாளர் ரி.எஸ். முகுந்தன் வழங்கினார். இதனைத் தொடர்ந்து க.செவ்வேள், ஜீவநதி துணை ஆசிரியர் கவிஞர் துஷியந்தனும் இணைந்து வேரோடி ஆவணப் படத்தின் பிரதியை அகரம் பணிப்பாளர் தி. ஜனகனுக்கு வழங்கினார். இவ் ஆவணப் படத்தின் ஆய்வுரையை தி.ஜனகன் மேற்கொண்டார்.

நிகழ்வின் இறுதியாக பிரதம விருந்தினர் க.செவ்வேள், நெடுந்தீவு முகிலன் ஆற்றியதுடன், யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைநெறி மாணவி புவிதா பரமலிங்கம் நன்றியுரையை வழங்கினார். (எப்.எஸ்)

## சனசமூக நிலையம் மீள் ஆரம்பம்

கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூக நிலையம் மீளக்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்டு விஜயதசமி தினத்தன்று காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ லயன் சோ.சுகிர்தன் திறந்து வைக்கவுள்ளார். இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேசசபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.தவநாயகம், நகுலேஸ்வரம் கிராம உத்தியோகத்தர் செல்வி த.நாக சுபதினி கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இத்தினத்தில் புதிய நிர்வாக சபைக்கான உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளது.

## மகிடாசூர சங்காரம்

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் ஆலயத்தில் மகிடாசூர சங்காரம் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும். நவராத்திரிப் பூசையின் இன்று கொலு பூசை நிறைவுற்றதும் அன்னை சிவகாமி மகிடா சூரணை சங்காரம் செய்ய சிங்க வாகனத்தில் எழுந்தருள்வாள்.

இதன் தொடர்ச்சியாக அன்னை சிவகாமி நாளை மாலை 6.30 மணிக்கு எழுந்தருளி, இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு ஊர்வலமாகச் சென்று வாழை வெட்டு நிகழ்வு இடம்பெறும்.

## ஸ்ரீ கணேசவில் வாணி விழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வாணி விழா இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா தவராசா (போல் தோழர்), கௌரவ விருந்தினராக, இளைப்பாறிய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில், பாடசாலை மாணவர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறும். நாளை விஜயதசமி தினத்தில் பாடசாலையில் குழுந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண சித்திரப் போட்டியில் மல்லாகம் மாணவிக்கு முதலிடம்



(மல்லாகம்)

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி மாண வர்களுக்கான சித்திரப் போட்டியில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் தரம் 2 இல் கல்வி கற்கும் லிதகுகன் கலஸ்ரிக்கா வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்

குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களைக் கொண்டுள்ள இப்பாடசாலை, முதல் தடவையாக நீண்ட கால இடைவெளியின் பின்னர் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரத் திணைக்களத்தின் கண்காணிப்புக் குழுக்கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான ஒக்டோபர் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 07ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கணவன் அடித்து மனைவி மரணம்

பரந்தன் குமரபுரம் பகுதியில் மதுபோதையில் இருந்த கணவர் கிழுவம் தடிகொண்டு மனைவியைத் தாக்கியதில் மனைவி உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவத்தில் கலையரசி (வயது-25) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

## இளைஞனுக்கு வாள்வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பழைய பஸ் நிலையத்தில் நேற்று இரவு 7.30 மணியளவில் பஸ் ரிக்கட் பதிவில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறு படுகாயமடைந்தவர் கொக்குவில் ஐயனார் கோவில் பகுதியைச் சேர்ந்த விதுரன் (வயது-20) என்பவராவார்.

சம்பவதினம் அன்று ரிக்கட் விற்பனையில் ஈடுபட்டிருந்த வேளை இருவர் இவரை வாளால வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். (எப்.எஸ்)

வேலை செய்யாமல் அரைநொடி கூட இருக்கக் கூடாது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் உனக்கென்று இறைவனால் தரப்பட்டுள்ள பணியை செய்து கொண்டே இருக்கவேண்டும்.

- அறிஞர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## முகத்திரண்டு புண் அகற்றுவோர்!

நாளை ஆசிரியர் தினம். தெளிவான, சிறப்பான மாணவ சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கே முதன்மையானது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு நாட்டின் எதிர்கால தலைவிதி ஒவ்வொரு வகுப்பறைகளிலும் உருவாக்கப்படுகிறது என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு.

மனிதர்களாக நாம் வளர்வதற்கு உதவும் வரிசையை மாதா, பிதா, மருத்துவர், பொறியியலாளர் என்று சொல்வதில்லை; மாதா, பிதா, குரு, தெய்வம் என்றுதான் சொல்கிறோம். ஆசிரியப் பணியின் உன்னத மும் முக்கியத்துவமும் சமூகத்தால் விளங்கிக் கொள்ளப்படுகிறது. மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள் என்று அவர்கள் குறிப்பிடப்படுகிறார்கள்.

நமது வெகு முன்னோர் காலத்திலிருந்தே குருவானவர் தெய்வத்திற்குச் சமமானவராகக் கருதித் தொடர்ந்து போற்றப்பட்டு வந்திருக்கிறது. அன்னையும் தந்தையும் ஒரு குழந்தையை உலகிற்குத் தருகின்றனர். ஆனால் ஒரு ஆசிரியன் உலகத்தையே குழந்தைக்குத் தருகிறான் என்று தமிழ்சிறப்பாயிரம் பாடல் சொல்கிறது.

மாணவப் பருவம், நல்லது கெட்டது பற்றி இனிமேல்தான் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும் பருவமாதலால், ஆசிரியர்களைக் கேலி கிண்டல் செய்தும், பட்டப் பெயர்கள் அளித்தும், சிலசமயம் வெறுப்பாகவும் பார்ப்பதுண்டு. ஆனால் அவர்கள் வளர்ந்த பிறகு, கண்டிப்பாகவும் அதேசமயத்தில் மாணவரின் முன்னேற்றத்தில் அக்கறையுடனும் நடந்து கொண்ட ஆசிரியர்களை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்காத மாணவர்கள் இருக்க முடியாது.

வீட்டிலிருந்து முதன்முதலில் சமூகத்தின் பல்வேறுபட்ட தரப்புகளை ஒரே இடத்தில் சிறுவர் சந்திப்பது பள்ளிக்கூடத்தில்தான். மாறுபட்ட குணாதிசயங்கள், மாறுபட்ட சிந்தனைகள், மாறுபட்ட வாழ்க்கைப் புலங்கள் என்று ஓர் இனிய கலவை அங்கு பழக்கமாகிறது. நம் ருசிகளையும், திறமைகளையும், சிந்தனைகளையும் நெறிப்படுத்துகிறவராக ஆசிரியர் அங்கு அமைகிறார். தன்னிடம் ஒப்படைக்கப்படும் சிறுவர்களை நல்ல மாணவர்களாக ஆக்குவதோடு மட்டுமல்லாது நல்ல மனிதர்களாகவும் ஆக்குவார்கள் என ஆசிரியர்களை நம்பியிருக்கிறது சமூகம்.

ஒரு மாணவர் பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்று, சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு எந்த ஆசிரியர்களின் பெயரை நன்றியுடன் நினைவுகூர்கின்றாரோ, தன் குழந்தைகளை ஒரு பள்ளியில் சேர்க்கும்போது தனக்கு வாய்த்த ஆசிரியர் போல தன் மகன், மகளுக்கும் கிடைக்கமாட்டாரா என்று எந்த ஆசிரியரை நினைத்து மனம் ஏங்குகின்றதோ அவர்களை நல்லாசிரியர்கள் என்று நாம் சொல்லிவிட முடியும். இவர்களைப் போன்றவர்களால்தான் இந்தச் சமூகத்தின் ஒவ்வொரு தலைமுறையும் நன்றி சொல்லிக்கொண்டு முன்னேறிச் செல்கிறது.

"எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு" என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள்தான். அவர்களை மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். அறிவை வழங்குபவர், அறிவைப் புகட்டுபவர், அறிவைத் துலக்குபவர். அறிவை வழங்கும் ஆசிரியர்கள் வெறுமனே பாடப்புத்தகங்களில் இருக்கும் பாடத்தைத் திரும்பவும் அதே அளவில், அதே தரத்தில் மாற்றமின்றி மாணவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அறிவைப் புகட்டுபவரின் பணி இன்னும் சுவையானதாக, பிடிக்காத உணவையும் ஊட்டிவிடும் சாமர்த்தியம் கொண்டதாக இருக்கிறது.

ஆனால், மூன்றாவது வகை ஆசிரியர்கள் ஒரு மாணவரின் உள்ளே இருக்கும் திறமையை அவரே பார்க்கும்படியாகத் துலக்கி, பளபளப்பாக்கி விடுவார். அந்தத் தன்னொளி வழியில் அந்த மாணவர் நடந்து வாழ்க்கையில் பலபடி மேலே செல்வார். அப்படியாக ஒவ்வொருவரும் தனது அறிவின் ஒளியைத் துலக்கிக் காட்டியவர்களை எண்ணிப் பார்க்கிறார்கள். ஒரு மனிதனை அவருக்கே அடையாளம் காட்டுவதுதான் குருவின் பணியாக இருக்கிறது.

சமூகத்தில் ஆசிரியர்களுக்குள்ள உயர்ந்த இடத்தையும் பொறுப்பையும் வலியுறுத்த ஒரு கருத்துச் சொல்லப்படுவதுண்டு. ஒரு வழககறிஞர் தவறு செய்தால் ஒருவர் பூமியில் இருந்து ஆறடி உயரத்தில் தொங்கவிடப்படுவார். ஒரு மருத்துவர் தவறு செய்தால் ஒருவர் பூமியில் இருந்து எட்டடி ஆழத்தில் புதைத்துவிடப்படலாம். ஆனால் ஒரு ஆசிரியர் தவறு செய்தால் எட்டின அளவிற்கு எதிர்கால சந்ததிகள் பாதிக்கப்படுவர் என்பதாகும். இதனை உணர்ந்து செயற்பட்டால் ஆசிரியர் பணி சிறக்கும். அதனால் நாடும் சந்ததியும் மனிதகுலமும் சிறக்கும். - ஆசிரியர்

# எண்ணெய் வளத்தை குறிவைத்தே புலிகளை ஆதரித்தது நோர்வே

## அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த



(கொழும்பு)

மன்னாரில் இருந்த எண்ணெய் வளத்தையும் வாயு வளத்தையும் கண்டுபிடிப்பதை தடுத்து நிறுத்தவே நோர்வே அரசு புலிகளுக்கு ஆதரவளித்ததாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரசு போரை முடிவுக்கு கொண்டுவராது. போயிருந்தால் மன்னார் பக்கமே யாரும் தலை வைத்து படுத்திருக்க முடியாது போயிருக்கும் என தெரிவித்த அமைச்சர் மன்னார் படுக்கையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள எரிவாயுவை இன்றும் மூன்று வருடங்களில் மின் உற்பத்திக்கும் போக்குவரத்துக்கும் பயன்படுத்த முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதலாவது எண்ணெய்க் கிணறு மூலம் ஹைட்ரோ கார்பன் என்ற வாயு கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும், இதனை உடனடியாகப் பயன்படுத்த முடியாது.

இந்த வாயுவை கடல் மட்டத்துக்கு மேல் கொண்டு வந்தால் மின்உற்பத்திக்காக பயன்படுத்த முடியும் என்றும் அதன் மூலம் மிகக்குறைந்த செலவுடன் மின் உற்பத்தி செய்ய முடியும்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள எரிவாயு சமையலுக்காகப் பயன்படுத்தப்படும் திரவ எரிவாயு அல்ல இந்த இயற்கை எரிவாயுவை திரவநிலைக்குக் கொண்டுவர வேண்டும்.

இதற்காக வெளிநாட்டில் இருந்து தொழில்நுட்பத்தைப் பெறவேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளுக்கு நிதிசேகரித்த வழக்கில் அவகாசம் வழங்க நீதிமன்றம் மறுப்பு

நெதர்லாந்தில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்ததாக குற்றஞ்சாட்டப்படும் ஐவர் மீது ஹேக் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டிருப்போரின் சார்பில் முன்னிலையாகும் சட்டவாளர் தமது விளக்கத்தைக் கொடுக்க போதிய காலஅவகாசம் கொடுக்கப்படவில்லை என்று கூறியுள்ளார்.

குற்றச்சாட்டுகளை நிராகரிக்கும் வகையிலான 200 பக்கங்கள் அடங்கிய தமது வாதத்தை சட்டவாளர் விக்ரர் கொபே, நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முன்வைத்திருந்தார்.

காலை தொடக்கம் மாலை 5 மணி வரை அவர் தனது 200 பக்கங்களில் அடங்கிய வாதத்தை முன்வைத்து உரையாற்றினார்.

ஆனாலும் நேரம் போதுமானதாக இல்லை என்பதால் மேலும் அரை மணிநேரம் தரவேண்டும் என்று அவர் நீதிபதிகளிடம் கோரினார்.

அதற்கு நீதிபதிகள் மேலதிக நேரத்தை வழங்க முடியாது என்று கூறிவிட்டனர். தமது கோரிக்கையை நீதிபதிகள் நியாயமற்ற வகையில் வெட்கத்துக்குரிய வகையில் புறக்கணித்து விட்டதாக சட்டவாளர் விக்ரர் கொபே குற்றஞ்சாட்டியுள்ளார்.

# ஒரே இயந்திர இலக்கத்தில் இரு லொறிகள் பதிவு

(கொழும்பு)

ஒரே இயந்திர இலக்கத்தைக் கொண்ட இரண்டு லொறிகளுடன் சந்தேகநபரொருவர் கடுகஸ்தோட்டைப் பகுதியில் கைது செய்யப் பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு லொறிகளும் ஒரே இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.கண்டி மாவட்ட குற்றப் புலனாய்வு மற்றும் சுற்றிவளைப்புப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

# உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரம் இன்று நள்ளிரவுடன் பூர்த்தியாகிறது

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவடைகின்றது.

இதனால் தேர்தல் நடைபெறும கொழும்பு, கண்டி, அம்பாந்தோட்டை போன்ற அச்சுறுத்தல் நிலவும் பிரதேசங்களில் பாதுகாப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

குறித்த இடங்களில் பிரதான அரசியல் கட்சிகளின் இறுதி பிரசார கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளமையினால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு மாநகர சபை, தெஹிவளை, கல்கிஸை, மாநகர சபை ஆகிய இரண்டு உள்ளூராட்சி சபைகளுக்கும் கடும் போட்டி நிலவுகின்றது.

அரசதரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இந்த இரண்டு மாநகர சபைகளையும் கைப்பற்ற தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன.

இன்று கொழும்பில் இடம் பெறவுள்ள இறுதித் தேர்தல் பிரசார கூட்டத்தில் அதிகளவிலான ஆதரவாளர்கள் பங்குகொள்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுவதனால் முப்படையினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.வாக்களிப்பு நடைபெறவுள்ள எட்டாம் திகதி சனிக்கிழமை பொலிஸார் மாத்திரமே வாக்குச் வாசடிகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

இராணுவத்தினர் வாக்குச் சாவடியில் இருந்து இரண்டு மைல் தொலைவுக்கு அப்பால் கடமையில் ஈடுபடுவர் என தேர்தல்கள் ஆணையாள் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டார்.

பிராசர நடவடிக்கைகள் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்ததும் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும் வேட்பாளர்கள் ஆதரவாளர்கள் கைது செய்யப்படுவர். எனவும் தேர்தல்கள் ஆணையாளீர் மஹிந்த தேசப்பிரிய அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டியள்ளார்.

# அநுராதபுர மாவட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்தி




(கொழும்பு)

மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் அநுராதபுரம் மாவட்டத்தில் 450 ஏக்கரில் மரமுந்திரிகை உற்பத்திச் செய்கைத் திட்டத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. அடுத்த சில மாதங்களுக்குள் இச்செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதுடன் இதற்காக மாவட்டத்தின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக 474 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

36,ஆயிரம் மரமுந்திரிகைக் கன்றுகள் நாட்டுவதற்கு தேவைப் படுவதாகவும் இதனை மிகிந்தலை மத்திய மரமுந்திரிகைக் கன்றுகள் உற்பத்தி செய்யும் இடத்தில் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இதே வேளை திவிநெகும வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப் பட்டவர்களுக்கு ஒரு இலட்சத்து 36ஆயிரத்து 398 மரமுந்திரிகைக் கன்றுகளை விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# அமைப்புக்கள், சட்டங்களால் மட்டும் சிறுவர் உரிமையை பாதுகாக்க முடியாது

## - நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்காக பல அமைப்புக்கள் உருவாகியுள்ளன பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன ஆனாலும் சிறுவர்உரிமை மீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சிறுவர்தினத்தன்று கிளி/புனிதபற்றிமா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சிறுவர் உரிமைகளை பாதுகாப்பதற்கு சமூகம் முன்வராதநிலையில் வெறும் அமைப்புக்களாலும் சட்டங்களாலும் மட்டும் இதை பாதுகாத்துவிட முடியாது. இவ்விடயத்தில் சமூகம் விழிப்புனர்வு அடைகின்றபோதுதான் இது சாத்தியமாகும்.

எமது சமூகத்தை பொறுத்தவரையில் இவ்விடையத்தில் மிகவும் அக்கறையுடன் செயற்படவேண் டிய நியையில் நாம் உள்ளோம். ஏனெனில் நாம் மிகக்கொடிய யுத்த்திற்குள் சிக் குண்டு எமது சந்ததியினரில் பலரை இழந்து மிகப்பெரும் தலைமுறை இடைவெளியைக் கொண்டவர்காகவுள்ளோம் எனவே இன்று இருக்கும் சிறார்களை நம்பியே நாளைய எமது எதிர்காலம் தங்கியுள்ளது. நாளை எமது சமூகம் ஒரு தலைநிமிர்ந்த சமூகமாக திகழவேண்டு மெனில் இவர்கள் சிறப்பான பண்பாட் டுக்கூடாக வளர்தெடுக்கப்படவேண்டும்

இதற்கு சமூகப்பொறுப் புடைய அனைவரும் முன்வரவேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பாடசாலையில் அமைக்கப்பெற்ற கணினிக்கூடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பாடசாலை முதல்வர் அருட் சகோதரி அன்ரனீற்றாமார்க் ஈ.பி.டி.பி. கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் யோகநாதன் மற்றும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கலந்துகொண்டனர்.

## பாடநூல்களை பெற்றுக்கொள்ளவும்

(நல்லூர்)

2012 ஆம் ஆண்டிற்கான இலவச பாடப்புத்தகத்தின் 1ஆம் தொகுதி நூல்கள் நல்லூர் கோட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே அனைத்து பாடசாலைகளும் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் கோட்டகல்வி உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வர்த்தகத்துறை மற்றும் கைத்தொழில்த்துறை அமைச்சர் ரிசாட் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் காலை 9.30 மணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஆரம்பமாகவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த வருடத்தில் நடைபெறும் முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இதுவாகுமெனவும் ஏ.பத்திநாதன் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இங்கு காணப்படும் குறைபாடுகள் குறித்து இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படுமெனவும் அவர் கூறினார். மாகாண அமைச்சு செயலாளர்கள், மாவட்ட திணைக்களத்தலைவர்கள், நாடாளுமன்ற உறுபபினர்கள் உள்ளிட்ட பலர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சில்லறை நாணயத்திற்கு மீண்டும் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் சில்லறை நாயணக் குற்றிகளுக்கு மீண்டும் தட்டுப் பாடும் பற்றாக்குறையும் நிலவி வரு கின்றது. அனேகமான வியாபார நிலை யங்களில் மிகுதிப் பணத்தில் சில்லறைக்குப் பதிலாக ரொபிகளும் மற்றும் பனடோல் வில்லைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.குடாநாட்டின் வங்கிகளில் சில்லறை நாணயக் குற்றிகள் அண்மையில் போதியளவு வழங்கப்பட்டும் கூட அவைகளுக்கு தொடர்ந்தும் பற்றாக்குறை நிலவி வருகின்றன.

சில வியாபார நிலையங்களில் சில்லறை நாயணக் குற்றிகள் இருந்தாலும் கூட அதைவழங்காது மிகுதிப்பணத்திற்கு பொருட்களே வழங்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. (வி)

# ஜெய்க்கா நிறுவனத்தினால் கடலட்டை வளர்ப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக நாவாந் துறை, குருநகர், மண்டைதீவு ஆகிய பகுதிகளில் ஜெய்க்கா நிறுவத்தின் திட்டத்தின் கீழ் கடல் அட்டை வளர்ப்புத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் மேற்குறித்த பகுதிகளிலேயே முதன்முதலில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருப்பதாக அவ் அதிகாரி குறிப்பிட்டார்.

தற்சமயம் குறித்த பகுதியில் கடற்பரப்பில் பொருத்தமான இடத்தில் வலையினால் கூடுகள் அமைக்கப்பட்டு அதனுள் கடல் அட்டைக் குஞ்சுகள் விடப்பட்டுள்ளது. இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு சுமார் ஐந்து மாதங்கள் கழிந்திருக்கின்ற நிலையில் இத்திட்டம் வெற்றியளித்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இன்னமும் முன்று மாதங்களில் இவற்றைப் பிடித்து பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய முடியுமென வும் தெரியவருகின்றது.

இத்திட்டம் பரிபூரணமாக வெற்றி யளிக்கும் பட்சத்தில் மேலும் இத்திட்டம் விரிவுபடுத்தத் திட்ட மிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக பெருமளவு கடற்தொழில் செய்யும் குடும்பங்கள் நன்மையடையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் புனர்நிர்மாணத்தையும் அபிவிருத்தியையும் மேம்படுத்தும் துரித வேலைத் திட்டதிட்டமிடல் என்னும் வேலைத்திட்டத்தின் ஊடாக ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் கடல் அட்டை வளர்ப்புத்திட்டத்தினை குறித்த பகுதிகளில் பரீட்சார்த்தமாக மேற்கொண்டு வருகின் றது. என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த கிராமிய விழிப்புக்குழுக்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

நாவலடி, பூம்புகார் அரியாலை கிழக்கு ஆகிய பிரதேசங்களில் உள்ள கிராம மக்கள் மத்தியில் விழிப்புக்குழு அமைக்கும் செயற்திட்டம் ஒன்று நேற்று மாலை 3.30 மணிக்கு அரியாலை முன்பள்ளி வளாகத்தில் யாழ். பொலிஸ் அத்தியட்சகர் சமன் சிகேரா தலைமையில் நடைபெற்றது.

இம் மூன்று கிராம மக்களில் இருந்து 23பேர் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒவ்வொரு கிராமத்திலும் 8 பேர் வீதம் குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளனர். இக் கிராமங்களில் ஏற்படும் களவு, வன்முறைச் சம்பவங்கள், சட்ட விரோதச் செயல்கள் நடைபெற்றால் இவர்கள் தலையிட்டு தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

இக்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கும் நபர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று அடையாள அட்டைக்கான படம் எடுக்கும் செயற்திட்டம் அரம்பிக்கப்பட்டதுடன், இக் குழுக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் செயற்பாட்டில் 3 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக் குழுக்களை தீர்மானிக்கும் பணியில் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் கிராம சேவையாளர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.)

# குறிகட்டுவான் துறையில் குடிநீர் விநியோக விஸ்தரிப்பு

(நயினாதீவு)

குறிகட்டுவான் துறையில் குடிநீர் விநியோகம் தற்பொழுது விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய கடும் வறட்சியால் இந்தத் துறைமுகப்பகுதியில் குடிநீருக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வந்தது. இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு குடிநீர் விநியோகம் விஸ்தரிக்கப்பட்டு பவுசர் மூலம் தினமும் குடிநீர் கொண்டு செல்லப்பட்டு கொள்கலன்களில் நிரப்பப்பட்டு வருகின்றன.

இந்த குடிநீர் விநியோகத்தால் மக்கள் சிரமம் இன்றி அதைப் பயன்படுத்தியும் வருகின்றனர். (வி)






மானிப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர்தின நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் மாணவர்கள் பங்குபற்றுவதையும் காணலாம். (104)

# நவீன விதை உற்பத்திப் பண்ணை பரந்தனில் திறந்து வைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக வட மாகாணத்தில் விவசாயத்துறையை மேம்படுத்தும நோக்குடன் விவசாயத் திணைக களத்தின் கீழ் நவீன முறையிலான அரச விதை உற்பத்தி பண்ணை கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொருளாதார அபி விருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நிலையத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்த வைத்தார்.

முன்பதாக அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் மங்கள வாத்தியம் சகிதம் நிகழ்விடத்தற்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

அங்கு நெல்குற்றும் இயந்திரத்தை இயக்கி அதன் செயற்பாடுகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ சம்பிரதாயப் பூர்வமாகத் தொடக்கி வைத்ததுடன் கட்டடத் தொகுதியையும் அதிதிகள் பார்வையிட்டனர்.



விவசாய அமைச்சின் மேலதிகச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் குனியோ டக்காஷி, விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜெகத் புஸ்பகுமார, ஜெய்க்கா நிறுவன பிரதம பிரதிநிதி அகிரா ஷிமுரா வட மாகாண ஆளுநர் சந்திரசிறி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் மு.சந்திர குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொணடனர். தொடர்ந்து அமைச்சர் பசில் ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

இன்றைய சூழலில் நெல் உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு கண்டு வருகின்ற போதிலும் நெல்லுடன் மட்டும் நின்றுவிடாது பயறு குரக்கன், கௌபி உள்ளிட்ட ஐந்து வகையான தானியங்களையும் எதிர்காலத்தில் உற்பத்தி செய்வதனூடாக தன்னிறைவு காண முடியுமென்று அவர் தெரிவித்தார்.

## வீதிகளில் வீசப்படும் கழிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கழிவுப் பொருட்களை சிலர் வீதிகளில் வீசிவிட்டுச் செல்வதால் அவை தேங்கி நகரில் அசுத்தத் தன்மையை ஏற்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கூடுதலான வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக விசிறப்படும் இந்தக் கழிவுப் பொருட்கள் காற்றினால் தூக்கி எறியப் படுகின்றன. இந்தக் கழிவுகள் நாலா பக்கமும் சிதறுவதால் நகரில் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருகின்றன.


கழிவுப் பொருட்களைச் சேர்ப்பதற்கு மாநகராட்சி மன்றம் இதற்கென விசேட கொள்கலன்கள் வைக்கப்பட்டும் அவற்றில் கொட்டப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வி)

## வீதி விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த இளைஞர் காயமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் காயமடைந்தவர் நவநீதன் (23) என்பவராவார்.

சம்பவ தினம் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்யும்போது வீதியில் உள்ள குழி ஒன்றில் சைக்கிள் சில் விழுந்ததால் தவறி விழுந்துள்ளார். தலையிலும், காலிலும் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (எப்.எஸ்)




சரஸ்வதி பூசை எண்டு எழுந்த மானமாகக் குறிப்பிட்டாலும் நவராத்திரி என்பதே சரியான சொல்லாகும்.

நவம் என்றால் ஒன்பது. ஒன்பது தினங்கள் துர்க்கை, லஷ்மி. சரஸ்வதி ஆகிய மூன்று பெண் தெய்வங்களுக்கும் முறையே வீரம்,செல்வம்,கல்வி ஆகிய செல்வங்களை வேண்டுகை செய்துவழிபட்டு தொன்று தொட்டு வரப்படுகிறது.

முதன் மூன்று நாளும் வீரத்தை வழங்கும் துர்க்கைக்கும், அடுத்த மூன்று தினங்களும் பணம் பொருட் சேர்க்கைக்காக லஷ்மிக்கும் இறுதி மூன்று தினங்கள் கல்வியாம் அழியாச் செல்வத்தை வழங்கும் சரஸ்வதிக்குமாகப் பூசை செய்வார்கள்.

கல்வியா,செல்வமா,வீரமா.. எனப் பிற்காலத்தில் சினிமா ஊடாகப் போட்டி மனப்பான்மையை வளர்த்த சங்கதிகள் எல்லாம் வந்து போயின.

எண்டாலும் இந்த மூன்று நிலைகளுக்குள்ளும் எல்லாக் காலங்களிலும் போட்டி மனப்பான்மை இருந்து வந்ததெல்லாம் மனிதனுடைய உற்பத்திகள் எண்டு தான் சொல்ல வேணும்.

உந்த நவராத்திரிக்காலம் துவங்கி விட்டால் சின்னதுகளுக்கெல்லாம் கொண்டாட்டம், குதூகலந்தான். ஏனெனில் இந்த ஒன்பது தின்ங்களும் கோவில்களில் அவல், சுண்டல், மோதகம், வடை, வாழைப்பழம், கற்கண்டு, பஞ்சாமிர்தம் 'போன்றவைக்கு குறைவிருக்காது.

ஒரு கோவில் முடிய மறு கோவிலெண்டு திரிஞ்சு வயிறு புடைக்க தின்னலாம், சில வேளைகளில் அதனால் வயிற்றுபாதைகளுக்கும் ஆளாகலாம், அதெல்லாம் விளங்காத பருவந்தான்.'

உப்புடித்தான் நான் சின்னப்பொடியனா இருக்கேக்க, எங்களுக்கை ஒருசெற் இருக்கும். எல்லாம் அண்ணன், தம்பி, மச்சான் எண்ட உறவுகள்தான்.

சரஸ்வதி பூசை முடிந்த மறுநாள் விஜயதசமி பத்தாம் நாள் மானம்பூ, வாழைவெட்டு எண்டும் சொல்லுவினம்.

ஒரு கோவிலில்ல இருந்து போற சுவாமி இன்னொரு கோவிலில் நாட்டப்பட்டிருக்கும் வாழைய இரண்டு வெட்டில் மூண்டு துண்டு விள வெட்டிப்போட்டுப் போவார். வாழையை வெட்டுவது என்னவோ ஐயர்தான்.

அப்புடி வாழை வெட்டப்போகேக்க சுவாமி ஆவேசம் கொண்டவராக குதிரை வாகனத்தில் குதிச்சுக் குதிச்சே போவார். திரும்பும் போது அந்த ஆவேசம் தீர்ந்தவராக அமைதியாக வருவார்.

போகேக்க ஒருவழி வரேக்க இன்னொரு வழி. இந்த வழிகளில் உள்ள வீட்டுவாசல்களில் சுவாமி பூசைக்கென அவல், சுண்டல், வடை பாத்திரங்களில் போட்டு பூசை மேடையில் வைத்திருப்பார்கள்.

சுவாமி போகேக்க வேகமாகப் போவதைப் பயன்படுத்தி அந்தப் படையல்களுக்குக் கிட்டவாக எங்கட கோஷ்டி நிண்டு கொள்ளும்.

கற்பூரம் காட்டி சுவாமி வெளிக்கிட்டதும் தயாரா நிற்கும் நாங்கள் ஒவ்வொண்டிலும் கைகள் நிறைய அள்ளிக் கொண்டு பறந்திடுவம்.

வாழைவெட்டி திரும்புகையில் எங்கட சேட்டையள் சரிவராது. சுவாமியும் ஆறுதலாக ஆடி அசைந்து போவார். பூசைக்காரர் எல்லாரையும் ஒழுங்காக இருத்தி ஆளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகத் தந்து விடுவார்கள்.

ம்...ஹு ம்... எல்லாம் அந்தக்காலம்... திரும்பிவராதொண்டு சொல்லினம்...

## எரிபொருள் விற்பனை நிலையங்களை முகவர்களே நிர்மாணிக்க வேண்டும்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வின்சர் தியேட்டர் சந்திக்கருகாமையில் உள்ள மார்க்கெட் எரிபொருள் விற்பனை நிலையம் நவீனமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளாக பாரிய கொள்கலன்கள் புதிதாக எடுத்துவரப்பட்டுள்ளன.

இவ் விற்பனை நிலையத்தில் ஏற்கனவே இருந்த மண்ணெண்ணெய் கொள்கலன் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால், கடந்த ஒரு வருட காலமாக மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்படவில்லை.

இதனால் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல் என்பவற்றுக்கு மூன்று புதிய கொள்கலன் எடுத்துவரப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் விற்பனை நிலையததை நடத்தும் விற்பனை முகவரே புதிய கட்டடத் தொகுதியை நிர்மாணிக்க வேண்டியிருப்பதாகவும், இதற்கான அமைச்சரவை தீர்மானத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிததன.

## பாலம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு பாலத்தின் புனரமைப்புப் பணிகள் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. பெரும் சேதப்பட்டு இருந்த இந்தப் பாலம் தற்போது புதிதாக மீள புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பாலத்தின் புனரமைப்புக்கென தென்பகுதியில் இருந்து அதற்கான பொருட்கள் தினமும் எடுத்து வரப்படுகின்றன. வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் இப் பாலப் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (வி)

## ஆசிரியர் தின விழாவும் வள்ளுவர் சிலை திறப்பும்

(பருத்தித்துறை)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் சர்வதேச ஆசிரிய தின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட மாணவ முதல்வன் செல்வன் மு.அபிராம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சட்டத் துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். தொடர்ந்து கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலைத் திரை நீக்கமும் இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் அன்றைய தினம் காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் யாழ்.பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளதுடன், பிரபல வர்த்தகர் ந.பாஸ்கரன், திருமதி இ.பாஸ்கரன் ஆகியோரும் கலநது கொள்ளவுள்ளனர். (உ-109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(05.10.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
புரட்டாதி 18 ஆம் நாள்.
இராகுகாலம் 12.02-1.32, சுபநேரம் 4.32 -6.02,
நட்சத்திரம்: பூராடம் மு.ப. 8.54 வரை
திதி: நவமி பி. இ 1.27 வரை
இலங்கையில் சரஸ்வதி பூஜை மகாநவமி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி.

**ரிஷபம:–** குடும்பத்தில் கவலை, பணக கஷ்டம், அதிகாரப் போட்டி, வீண் அலைச்சல், விபத்து வரக்கூடும்.

**மிதுனம் :–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், தேக ஆரோக்கியம், இனசன அழைப்பு, வீண் கோபம்.

**கடகம்:–** வீணான கோபம், பணக் கஷ்டம், உடல் உபாதை, மனக் கவலை, மருத்துவச் செலவு.

**சிம்மம்:–** பணவரவு, குடும்பத்தில் கவலை, தொழில் வெற்றி, சகோதர பாசம், தேக சுகக் குறைவு.

**கன்னி :–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், விபத்து வரலாம், உறவினர் வருகை, எதிரியை வெல்லுதல்.

**துலாம் :–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், தொழில் வெற்றி, பெரியோர் பாராட்டு, தேடிப் போதல்.

**விருச்சிகம்:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, தேக ஆரோக்கியம், வீண் கோபம், விபத்து வரக்கூடும்.

**தனுசு:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் தொல்லை, தேக ஆரோக்கியம், நினைத்ததைச் சாதித்தல்.

**மகரம:–** பிணக்குத் தீர்தல், பணக்கஷ்டம், குடும்பக் கவலை, வீண அலைச்சல், தேக சுகக் குறைவு.

**கும்பம் :–** பணவரவு, வீணான கோபம், விபத்து வரக்கூடும், தேக சுகம் குறைவு, மருந்துச் செலவு.

**மீனம்:–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், தொழில் விருத்தி, உறவினர் வருகை, உடல் உபாதை.

# ஆடுகளம் சரியாக அமையவில்லை

## ஹர்பஜன் குற்றச்சாட்டு



ஹர்பஜன்

(சென்னை)

சென்னை ஆடுகளத்தில் பந்துகள் மெதுவாக வந்ததனால் அதிகமான ஓட்டங்களை எடுக்க முடியவில்லை என, மும்பை இந்தியன்ஸ் அணி கப்டன் ஹர்பஜன் சிங் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து மும்பை அணி கப்டன் ஹர்பஜன் சிங் கூறுகையில், சென்னை சேப்பாக்கம் மைதானத்தின் ஆடுகளத்தில், குறிப்பிட்ட அளவுக்கு குறைவாக பந்து எழும்பி வந்தது. இதனால் அதிக ஓட்டங்களைச் சேர்க்க முடியவில்லை. இருப்பினும் எங்கள் பந்து வீச்சாளர்களான அபுநேச்சிம், மலிங்க ஆகியோர் சிறபபாகச் செயற்பட்டனர். அரையிறுதிக்கு செல்ல, பிற போட்டிகளின் முடிவுக்காக காத்திருக்க வேண்டியுள்ளது. ஒருவேளை வாய்ப்பு கிடைத்தால், இன்னும் சிறப்பாகச் செயற்பட முயற்சிப்போம் எனத் தெரிவித்துள்ளார்.


இது குறித்து நியூ சவுத் வேல்ஸ் அணியின் கப்டன் காடிச் தெரிவிக்கையில், சென்னை ஆடுகளம் சரியானது அல்ல. பந்து மிகவும் மெதுவாக வருகிறது. இந்தளவுக்கு ஆடுகளம் மந்தமாக இருக்கும் என்று நினைக்கவில்லை. சென்னை அணி வலுவானது என்று தெரியும். இதனால் இன்றைய போட்டியில், அனைத்து விதத்திலும் செயற்பட முயற்சிப்போம் என மேலும் தெரிவித்தார்.

# முதல் சுற்றில் சோம் தேவ் தோல்வி

(டோக்கியோ)

ஜப்பான் ஓப்பன் ரென்னிசில், இந்திய வீரர் சோம்தேவ் தேவர்மன் முதல் சுற்றில் தோல்வி அடைந்தார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் சோம்தேவ் தேவர்மன், செக் குடியரசின் ராடிக் ஸ்டீபனிக்கை எதிர்த்து விளையாடினார். இதில், சோம்தேவ் 4:6, 3:6 என்ற நேர் செட்களில் தோல்வி அடைந்தார். நான்காம் நிலை வீரரான அமெரிக்கா வின் மர்டி பிஷ் 6:4, 3:6, 7:5 என்ற செட்களில் சக நாட்டு வீரரான ரியான் ஹாரிசனை போராடி வெற்றி பெற்றார்.





புதுடில்லியில் நேற்றுமுன்தினம் மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மக்கானிடமிருந்து, இந்திய கிரிக்கெட் வீரர் ஷகீர்க்கான் அர்ஜூனா விருதைப் பெற்றுக்கொள்வதைக் காணலாம்.

# இந்தியாவிற்கு எச்சரிக்கை

விளையாட்டுச் செய்திகள்

(புதுடில்லி)

இரு ஹொக்கி அமைப்புகளுக்கு இடையில் உள்ள சிக்கல் தீரவில்லை என்றால் லண்டன் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டிகளில் இந்திய அணி பங்கேற்கத் தடைவிதிக்கப்படும் என, சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு (எப்.எச்.ஐ.) எச்சரித்துள்ளது.

இந்திய ஹொக்கி கூட்டமைப்பு (ஐ.எச்.எப்.), ஹொக்கி இந்தியா (எச்.ஐ.) என இரு அமைப்புகள் தற்போது உள்ளது. இதனை இணைக்க, மத்திய விளையாட்டு அமைச்சர் அஜய் மேகன் எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கவில்லை. இதனால், இந்தியாவில் நடக்க இருந்த, சம்பியன்ஸ் டிராபி ஹொக்கித் தொடர் இரத்துச் செய்யப்பட்டது.

இது குறித்து எப்.எச்.ஐ. அனுப்பிய கடிதத்தில் இரு ஹொக்கி அமைப்புகள், விரைவில் இணைய வேண்டும் என, தெரிவித்து இருந்தது.

இப்போது மீண்டும் மத்திய விளையாட்டு அமைச்சகத்துக்கு, சர்வதேச ஹொக்கி கூட்டமைபபு கடிதம் எழுதியுள்ளது. அதில் இந்த அமைப்பின் தலைவர் லியாண்ட்ரோ நேகிரே கூறியிருப்பதாவது:

இந்தியாவின் எச்.ஐ. அமைப்பை மட்டுமே நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம் சர்வதேச தொடர்களுக்கு இந்திய அணியை தேர்வு செய்து அனுப்ப இவர்களுக்குத் தான் அங்கீகாரம் உள்ளது. இதனால் இந்திய அரசு ஐ.எச்.எப். மற்றும் எச்.ஐ. என்ற இரு அமைப்புகளிடமும் பேசி நிரந்தர தீர்வுகாண முன்வரவேண்டும் என்றார்.

# கெயிலின் விளாசலில் பெங்களூர் அணி வெற்றி

## - சுருண்டது சமர்செட் அணி -






சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதல் வெற்றியைப் பெற்றுள்ளது. பெங்களூரில் நடைபெற்ற லீக் போட்டியில் சோமர்செட் அணியை பெங்களூர் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 206 ஓட்டங்களை எடுத்தது. கிறிஸ் கெயில் அதிரடியாக விளையாடி 86 ஓட்டங்களை எடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சோமர்செட் 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. பெங்களூர் அணியில் கிறிஸ் கெயில், டில்ஷான் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களம் இறங்கினர். தொடகத்தில் இருந்தே இருவரும் அதிரடியாக ஆடினர். 2ஆவது ஓவரில் கெயில் அவுட் ஆவதில் இருந்து தப்பினார். டில்ஷான் 16 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதனால் 10.3 ஓவரில் பெங்களூர் அணி 100 ஓட்டங்களை எட்டியது. ஹோலி 22 பந்துகளில் 33 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். திவாரி 18 ஓட்டமும், அகர்வால் 19 ஓட்டமும் எடுத்தனர்.

சோமர்செட் அணியின் பந்து வீச்சை பதம் பார்த்த கெயில் 86 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். இதில் 8 சிக்ஸர்களும் 4 பவுண்டரிகளும் அடங்கலாக 20 ஓவர்கள் முடிவில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 6 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டங்கள் எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சோமர்செட் அணியில் டிரெகோ, கீஸ்வெட்டர் ஆகியோர் சிறப்பான தொடக்கத்தை அளித்தனர். இருவருமே அடித்து விளையாடியதால் ஸ்கோர் வேகமாக உயர்ந்தது. ஆனால் கீஸ்வெட்டர் 19 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்வந்த வீரர்கள் நிலைத்து நின்று விளையாடவில்லை. எனினும் டிரெகோ தனி ஆளாகப் போராடினார். அவர் 38 பந்துகளில் 58 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் அடங்கும். 20 ஓவர்கள் முடிவில் சோமர்செட் அணியால் 6 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

# தென்னாபிரிக்க அணியின் தலைவராக அம்லா



சர்வதேச ஒருநாள் மற்றும் ருவென்ரி -20 கிரிக்கெட் போட்டிகளுக்கான தென்னாபிரிக்கா அணியின் தலைவராக ஹசீம் அம்லா அறிவிக்கப்பட்டுள்ளார்.

வில்லியஸ் உபாதைக்கு உள்ளானதை அடுத்து அவுஸ்ரேலிய அணிக்கெதிராக நடைபெறவுள்ள போட்டித் தொடருக்கான தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெற்றுவரும் சம்பியன் லீக் தொடரில் றோயல் சலஞ்ஜஸ் பெங்களூர் அணிசார்பாக விளையாடிய வில்லியஸ் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போது உபாதைக்குள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பரிசுத்தொகை அறிவிப்பு

EA SPORTS

GRAND SLAM TENNIS

கிரான் ஸ்லாம் ரென்னிஸ் போட்டிகளின் வரலாற்றில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய பகிரங்க ரென்னிஸ் தொடரில் மிகவும் அதிக பரிசு தொகை வழங்கப்பவுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் வெற்றிபெறுவோருக்குத் தலா 2.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள இந்த தொடரில் மொத்தமாக 26 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளதாக ஏற்பாட்டளார்கள் குறிப்பிட்டுள்ளனர்.

முன்னாள் சம்பியன்களான கிம் கிளைஸ்டர்ஸ் மற்றும் செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் மகளிர் பிரிவில் பிரகாசிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேசிய அணியிலுள்ள வீரர்களின் வருட ஊதியத்திற்கு ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் சபை தேசிய அணியில் 2011, 2012 காலப்பகுதியில் விளையாடும் வீரர்களுக்கான ஒப்பந்தப் பட்டியலை ஆறு வகைக்குள் அடக்கி, அவர்களுடன் ஊதியக் கொடுப்பனவை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் வீரர்களை கையெழுத்திட வைத்துள்ளது.

இதன்படி, அணியின் முன்னணி வீரர்களான டில்ஷான், மஹேல, சங்கக்கார, திலான் சமரவீர மற்றும் மலிங்க ஆகியோர் ஒரு இலட்சத்து 27 ஆயிரம் அமெரிக்க டொலர் அல்லது 13.9 மில்லிய்ன ரூபாவை வருடமொன்றுக்குப் பெற்றுக்கொள்வர்.

இதேபோன்று நுவான் குலசேகர, அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் 82 ஆயிரம் அமெரிக்க டொலர் அல்லது ஒன்பது மில்லியன் ரூபா வருடமொன்றுக்கு வருமான மாகப் பெறுவர்.

இதற்கு அடுத்தபடியாக உபுல் தரங்க, பிரசன்ன ஜெயவர்த்தன, அஜந்த மென் டிஸ், ரங்கண ஹேரத், தரங்க பரண விதாரண, சுராஜ் ரண்டீவ், டில்ஹார பெர் னாண்டோ, திசார பெரேரா, சானக வெலகெதர, சாமர கப்புக்கெதர, திலின கண டம்பி, டினேஸ் சந்திமல், லகிரு திறிமணி ஆகிய வீரர்களும் அடங்குகின்றனர்.

# போட்டி ஒத்திவைக்கப்படுமா?

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற வுள்ள தெற்காசிய கடற்கரை கரப்பந் தாட்டச் சுற்றுப் போட்டியை உள்ளூராட் சித் தேர்தல் வாக்களிப்பின் பின்னர் ஆரம பிக்குமாறு ஏற்பாட்டாளர்களைக் கோர வேண்மென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவைத் தேர்தல் கண்காணிப் பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் சனிக்கிழமை 23 உள்ளூ ராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடை பெறவுள்ளது. இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராட்சி தெரிவிக் கையில்,

இவ்விடயம் குறித்து நாம் ஏற்கனவே மகிந்த தேசப்பிரியவுக்கு அறிவித்துள்ள தாகவும், அவர் விழாவின் ஆரம்ப நேர த்தை மாலை 6 மணியாக மாற்றுமாறு ஏற்பாட்டாளர்களைக் கோரியுள்ளதாகத் தெரியவந்துள்ளதாகவும் கூறினார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் இவ்விழா தேர்தல் பிரசாரத்திற்குப் பயன்படுத்தப்படலாம் என அஞ்சப்படுவதாலேயே இவ்விட யத்தைத் தேர்தல் ஆணையாளரின் கவ னத்திற்கு பவ்ரல் கொண்டு சென்றதாக ரோஹண ஹெட்டியாராட்சி கூறினார்.

எனினும் இது ஒரு சர்வதேச விழா என்பதால் இவ்விழாவை ஒத்திவைப்பது பிரச்சினையாகலாம் எனவும் அவர் கூறினார். இவ்விடயம் குறித்து பொலிஸ் மா அதிபருடன் தான் பேசவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கிழக்கில் சாதனை



(மட்டக்களப்பு)

2011 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகள விளையாட்டு விழாவில் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்து வப்படுத்திய நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை மாணவன் எம்.எஸ்.எம்.நுஸ்கி ஆண்களுக்கான 19 வயதுக்குட் பட்ட முப்பாய்ச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நடை பெற்றுவரும் அகில இலங்கை பாடசாலைகள் விளையாட்டு விழாவின் மெய்வன்மை போட்டி களில் எம்.எஸ்.எம்.நுஸ்கி முப் பாய்ச்சல் போட்டியில் 14.65 மீற்றர் துரம் பாய்ந்து முதலா மிடம் பெற்று தங்கப்பதக்கத்தினை சுவீகரித்துள்ளார்.

அகில இலங்கை பாடசாலை கீள் விளையாட்டு போட்டியில் எம்.எஸ்.எம்.நுஸ்கி மாத்திரமே கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித் துவப்படுத்தி தங்கப் பதக்கத் தினை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நிந்தவூர் பிரதேசத்திற்கும், தான் கல்வி கற்கும் அல்-அஸ் றக் தேசிய பாடசாலைக்கும், கல்முனை கல்வி வலயத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்துள்ள இவருக்கு சிரேஷ்ட உடற்கல்வி ஆசிரியர் ஐ.எல்.எம்.இப்றாகிம் ஆரம்பம் முதல் பயிற்சிகளை வழங்கி வருகின்றார்.

ஏனைய உடற்கல்வி ஆசிரியர் களான ஏ.எம்.நவாஸ், எம்.பி. மஹ்றூப், ஏ.எம்.நஜிம், எச்.ஜெமீல இவர்களுடன் கல்விக் கல்லூரி கட்டுறு பயிலுனர் ஆசிரியர்க ளான எம்.எம்.எம்.சஜுன், எஸ். வத்சலா ஆகியோரும் பயிற்சி களை வழங்கி வருகின்றனர்.

அகில இலங்கை பாடசாலை கள் விளையாட்டு விழாவில் தங்கப்பதக்கம் பெற்று பாசா லைக்கு பெருமை சேர்த்துள்ள வீரர் நுஸ்கிக்கு பாடசாலை அதிபர் எஸ்.ஏ.எஸ்.எம்.சம்சுதீன் மற்றும் பிரதி அதிபர்கள் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்து ள்ளனர்.



யாழ்.பாரதி விளையாட்டுக்கழக மைதானப் புனரமைப்புக்காக யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந் கழக நிர்வாகத்தினரிடம் ஒரு தொகைப் பணத்தை வழங்குவதைக் காணலாம்.

# கிரிக்கெட்டில் ரன்னர் முறை நீக்கம் புதிய விதி முறைகள் அமுலாகியது

சர்வதேச கிரிக்கெட் சபையி னால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல புதிய விதிகள் சனிக்கிழமை முதல் அமுலுக்கு வருகின்றன. துடுப்பாட்ட வீரர் காயமடைந்தால் ரன்னர் ஒருவரைப் பயன்படுத்தும் முறையும் இதன் மூலம் நீக்கப்படுகி றது.

கடந்த மே மாதம் லண்டனில் நடைபெற்ற ஐ.சி.சி. கிரிக்கெட் குழு வின் மாநாட்டின் பின்னர் டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டி கள் மற்றும் இருபது 20 போட்டிக ளின் சில விதிகளில் மாற்றங்களை செய்ய வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. அவ்விதிகள் தற்போது அமுலுக்கு வருகின்றன.

இவ்விதிகளின் கீழ் நடை பெறும் முதலாது போட்டியாக எதிர்வரும் 11 ஆம் திகதி மேற் கிந்தியத் தீவுகளுக்கும் பங்களா தேஷுக்கும் இடையிலான ருவெண்டி-20 போட்டி அமையவுள்ளது. மாற் றம் செய்யப்பட்டுள்ள சில விதிகள் பின்வருமாறு:

**பவர் பிளே (ஒருநாள் போட்டிகளில் மாத்திரம்)**

ஒருநாள் சர்வதேச போட்டி களில் 15 ஓவர்களின் பின்னர் அணிகள் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்ட பவர் பிளேக்களை எடுத்துக் கொள்ளலாம். (தலா 5 ஓவர்கள்) 40 ஆவது ஓவருக்கு முன் பவர்பிளே நிறை வடைய வேண்டும்.

முன்னர் 10 ஓவர்களின் பின்னர் எந்த கட்டத்திலும் பவர் பிளேயை எடுத்துக்கொள்ள அணிகள் அனும திக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**ரன்னர் முறை நீக்கம் (அனைத்து வகை போட்டிகளிலும்)**

துடுப்பாட்ட வீரர் ஒருவர் உபா தைக்குள்ளானால் ரன்னர் ஒருவ ரின் உதவியைப் பெற முடியாது. ஆனால் அத்துடுப்பாட்ட வீரர் தற் காலிகமாக ஓய்வு பெற்றுவிட்டு பின்னர் திரும்பிவந்து துடுப்பெ டுத்தாடலாம்.

**ஒவ்வொரு இன்னிங்ஸிலும் இரு புதிய பந்துகள் (ஒருநாள் போட்டிகளில் மாத்திரம்)**

களத்தடுப்புச்செய்யும் இரு அணி களுக்கும் இரு புதிய பந்துகள் வழங்கப்படும். ஒவ்வொரு ஓவ ருக்கும் இப்பந்துகளை மாற்றி பயன்படுத்த வேண்டும். அதாவது ஒரு முனையிலிருந்து ஒரு பந்து வீசப்படும். மற்ற முனையிலிருந்து 2 ஆவது பந்துவீசப்படும். 34 ஆவது ஓவரில் பந்தை கட்டாயமாக மாற்றும் விதி இனி இருக்காது.

**ஆடுகளத்தை மறித்தால் ஆட்டமிழப்பு (அனைத்து வகைப் போட்டிகளிலும்)**

துடுப்பாட்ட வீரர் நியாயமான காரணம் இல்லாமல் தனது ஓட் டத்திசையை மாற்றினால் அவர் ஆடுகளத்தில் இடையூறு ஏற்ப் டுத்தியமைக்காக ஆட்டமிழந் ததாக கள நடுவர் அறிவிக்க முடியும்.

**மறுமுனையிலுள்ள வீரரை பந்துவீச்சாளர் ரன் அவுட்டாக்குதல் (அனைத்து வகை போட்டிகளிலும்)**

முந்தைய விதிகளின்படி பந்து வீச்சாளர் பந்துவீச்சு பகுதிக்குள் வந்த பின்னர் மாத்திரமே அவரின் பக்கத்திலுள்ள துடுப்பாட்ட வீரரை ரன்அவுட் செய்யமுடியும். அதா வது பந்துவீச்சாளரின் பின்கால் பந்துவீச்சுப் பகுதியில் பதிந்தவுடன் பந்துவீச முன்னரே மறுமுனையி லுள்ள வீரர் ஓட ஆரம்பிக்க முடியும.

ஆனால் புதிய விதியின் படி, பந்துவீச்சாளர் பந்தை வீச முன்ன ரும் மறுமுனையிலுள்ள துடுப்பா ட்ட வீரரை ரன் அவுட் ஆக்கலாம். பந்துவீச்சாளர் தனது முயற்சியில் வெற்றியடையாவிட்டால் நடுவர் பந்தை டெட் போலாக அறிவிக்க வேண்டும்.

**போட்டியை முடிக்க மேலதிக நேரம் (டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம்)**

தேநீர் அல்லது மதிய உணவு இடைவேளையை 14 நிமிடநேரத் திற்கு (குறைந்தபட்சம் 4 ஓவர்) தாமதிக்குமாறு எந்தவொரு அணித் தலைவரும் கோரினால் நடுவர் அதற்கு அனுமதிக்கலாம். இத் தாமதத்தின் மூலம் தீர்க்கமான பெறு பேறு ஒன்று கிடைக்கும் என நடு வர் கருதினால் மாத்திரம் அவர் அதை அனுமதிப்பார்.

**9 விக்கெட் வீழ்ந்தபின் இடைவேளை தாமதிப்பு (டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம்)**

டெஸ்ட் இன்னிங்ஸ்களில் 9 விக்கெட் வீழ்ந்தபின் மதிய உணவு அல்லது தேநீர் உணவு இடை வேளையை 30 நிமிடங்களுக்கு தாம திக்குமாறு எந்தவொரு அணித் தலைவரும் கோரலாம். இதற்கு முன் தேநீர் இடைவேளையை மாத் திரம் இவ்வாறு தாமதிக்க அனும திக்கப்பட்டது.

**இன்னிங்ஸ்களுக்கு இடையிலான இடைவேளை (ஒருநாள் போட்டிகளில் மாத்திரம்)**

இடையூறுக்குள்ளாகாத போட்டி யொன்றின் இன்னிங்ஸ்களுக்கு இடையிலான இடைவேளை 20 நிமிடத்திலிருந்து 30 நிமிடமாக அதிகரிக்கப்படும்.

## இரானி கோப்பை கிரிக்கெட் மீண்டது ராஜஸ்தான் அணி

(ஜெய்ப்பூர்)

"ரெஸ்ட் ஆப் இந்தியா" அணி க்கு எதிரான இரானி கோப்பை போட்டியில், ராபின் பிஸ்ட், ராஷ்மி பரிதா அரைச்சதம் அடித்து கைகொ டுக்க, ராஜஸ்தான் அணி சர்விலி ருந்து மீண்டது.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப் பூரில், இரானி கோப்பை கிரிக் கெட் போட்டி நடக்கிறது. ஐந்து நாட்கள் நடக்கும் இப்போட்டியில் பார்த்திவ் படேலின் தலைமையி லான "ரெஸ்ட் ஆப் இந்தியா", நடப்பு ரஞ்சி கோப்பை சம்பியன் ராஜஸ்தான் அணிகள் விளையா டுகின்றன. முதல் இன்னிங்சில் ரெஸ்ட் ஆப் இந்தியா அணி 663 ஓட்டம் எடுத்தது. பின், முதல் இன் னிங்சை தொடங்கிய ராஜஸ்தான் அணி, இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் மூன்று விக்கெட் டுக்கு 53 ஓட்டம் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்சை தொடர்ந்த ராஜஸ்தான் அணியின் ராபின் பிஸ்ட், ராஷமி பரிதா பொறுப்பாக ஆடினர். ரெஸ்ட் ஆப் இந்தியா பந்துவீச்சை எளிதாக சமாளித்த இவர்கள் இருவரும் அரைச்சதம் அடித்தனர். நான்காவது விக்கெட் டுக்கு 158 ஓட்டம் சேர்த்த போது, பரிதா (85) அவுட்டானார். அடுத்து வந்த அசோக் மேனரியாவுடன் இணைந்த பிஸ்ட் (95) சதம் அடிக் கும் வாய்ப்பை கோட்டைவிட்டார்.

# அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டது

(அவுஸ்ரேலியா)

கிரான் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகளின் வரலாற்றில் அடுத்த வருடம் நடைபெற வுள்ள அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரில் மிகவும் அதிக பரிசுத் தொகை வழங் கப்படவுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரி வுகளில் வெற்றிபெறுவோ ருக்கு தலா இரண்டு தசம் மூன்று மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள இந்த தொடரில் மொத்தமாக 26 மில் லியன் ரூபா வழங்கப்படவுள்ள தாக ஏற்பாட்டாளர்கள் தெரி வித்துள்ளனர்.

முன்னாள் சாம்பியன்களான கிம் கிளைஸ்டர்ஸ் மற்றும் செரீனா வில்லியம்ஸ் ஆகி யோர் மகளிர் பிரிவில் பிரகா சிப்பார்கள் என போட்டியின் பணிப்பாளர் எதிர்வு கூறியுள் ளார்.

# இங்கிலாந்து அணி இந்தியாவில்

(புதுடில்லி)

இந்தியாவுக்கு எதிரான 5 ஒருநாள், ருவென்ரி-20 தொடரில் கலந்துகொள்ளும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவைச் வந்தடைந்துள்ளது.

ஹைதராபாத்திற்கு வருகை தந்த இங்கிலாந்து அணியை இந்திய கிரிக்கெட் நிர்வாகத்தின் முக்கிய உறுப்பினர்கள் வர வேற்றுள்ளனர்.

5 சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலும் இருபதுக்கு இருபது போட்டிகளிலும் இங்கிலாந்து, இந்திய அணிகள் விளை யாடவுள்ளன.

இங்கிலாந்து மண்ணில் பெற்றுக்கொண்ட படுதோல்விகளுக்கு சொந்த மண்ணில் வைத்து இந்தியா பதில் வழங்குமா என்பது குறித்து கிரிக்கெட் இரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

## உஷ்ணமான காலநிலை ஒரு மாதத்திற்கு தொடரும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் உஷ்ண காநிலை, மேலுமொரு மாத்திற்கு தொடரு மென வளிமண்டளவியல் திணைக்களம் குறிப்பிடுகின்றது. இலங்கையை ஊடறுத்து உஷ்ணமான காற்று வீசு வதே இதற்குக் காரணம் என திணைக் களத்தின் கடமைநேர வானிலை நிபு ணர் சமிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த மாதம் சூரியன் உச்சம் கொண்டிருந்ததால் அதன் பாதிப்புக்கள் குறைந்தளவில் தொடர் வதகாவும் அவர் குறிப்பிட்டார்.

காலை வேளைகளில் குறைந்தள வில்ான மேகக் கூட்டங்கள் காணப்படு வதாலும் உஷ்ணம் அதிகமாக இருக்கும் வடகீழ் பருவப்பெயர்ச்சியின் போது இந்த நிலைமை மாறுவதற்கான சாத்தி யங்கள் காணப்படுவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## வாழைப்பயிர்ச் செய்கைக்காக அமெரிக்க நிறுவனத்திற்கு நிலம்



(கொழும்பு)

உல்ஹிட்டிய பகுதியில் மேலும் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு வாழை பயிற்செய்கைக்காக அமெரிக்க நிறுவன மொன்றிடம் அரசாங்கத்தால் வழங்கப் பட்டுள்ளதாக சூழலியலாளர்கள் தெரி விக்கின்றனர். இதற்கு முன்னரும் குறித்த நிறுவனத்திற்கு அரசாங்கத்தால் சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்பட்டதாக சூழலியலாளர் பிரதீப் காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த அமெரிக்க நிறுவனத்தினால் இலங்கையின் 35 வாழை இனங்களை அழிக்கும் நடவடிக் கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

உல்ஹிட்டிய பகுதியில் மேலும் இரண்டாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு வாழைப் பயிற்செய்கைக்காக அமெரிக்க நிறு வனமொன்றிக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் சுற்றாடல் பிரதியமைச்சர் ஏ.ஆர்.எம்.அப்துல் காதரிடம் ஊடகவிய லாளர்கள் கேட்டபோது இது தொடர் பில் தமக்கு எவ்விதத் தகவலும் பதிவாக வில்லை எனவும் இது குறித்து ஆராய் வதாகவும் குறிப்பிடுகிறார்.

## நாட்டின் அபிவிருத்திப் பணிகள் சகல மட்டத்தையும் சென்றடையும்

(கொழும்பு)

**நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்லும் தருணத்தில் நாடளாவிய ரீதியாகவுள்ள அனைத்து நிறுவனங்கள் மற்றும் கிராமங்கள் தொடர்பாகவும், கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



கண்டி ஜனாதிபதி வாசஸ்தலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.அதிகாரத்தில் இருக்கின்ற அரசாங்கத்துடன் இணைந்து செயற்படு வதன் ஊடாக பாரிய வேலைத்திட்டங் களை நிறைவேற்றிக்கொள்ள முடியும.

கிராமங்கள் குறித்த அனைத்துத் தகவல் களும் தமக்கு கிடைப்பதாகவும், பாரிய நீதி அவற்றின் அபிவிருத்தியின் பொருட்டு ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

நுவரெலியாவை பொருளாதார ரீதியாகவும், குறைபாடுகளை நிவர்த்தி செய்யவேண்டுமாயின் நுவரெலிய மாநகர சபை ஆட்சியை அனைவரும் ஒன்று சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பிற்கு வழங்க வேண்டும.

மத்திய அரசாங்கமும், மாநகரசபை களும் ஒரே ஆட்சியின் கீழ் வரும் பட்சத் தில் மாத்திரமே அதனுடைய அபிவிருத்தி தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும் என்றார்.

## திறந்த பல்கலைக்கழகம் மலையகத்திலும் வேண்டும்

(கொழும்பு)

திறந்த பல்கலைக்கழகம் மலையகத் திலும் நிறுவப்பட வேண்டும். என திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எஸ் சந்திரபோல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில்.


யாவருக்கும் கல்வி என்ற அடிப்படை யில் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரு கின்றது.

இதனை மலையகத்திலும் நடைமுறைப் படுத்த வேண்டியது அவசியம்

எனினும், போதிய விளக்கங்கள் இன்மை காரணமாக கடந்த சில வருடங் களாக போதியளவு மாணவர்கள் கற்கை நெறிகளில் இணைந்து கொள்ள வில்லை என அவர் தெரிவித்தார்.

## அபராதத் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)



ரயில் கடவைகளின் பாதுகாப்பு வேலி மூடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங் களில் அவற்றிற்குள் பிரவேசிக்கும் சாரதிகளிடம் அறவிடப்படும் அபராதம் 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள் ளது. கடந்த முதலாம் திகதிமுதல் இந்த அபராதத் தொகை உயர்த்தப்பட்டுள்ள தாக ரயில்வேத் திணைக்களத்தின் திட்ட மிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க தெரிவித்தார்.

ரயில்வேக் கடவைகளில் இடம்பெற்ற விபத்துக்களை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். போக்குவரத்து விதிமுறை களை மீறும் வகையில் சில சாரதிகள் ரயில்வே கடவைகளுக்குள் பிரவேசிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் ரயில்வேத் திணைக்களத்தின் பொது முகாமையாளரின் உத்தரவிற்கு அமைய அபராதப் பணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக விஜய சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் கவனயீனமே காரணம்

### பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பிரச்சினை கள் அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் கவ னயீனமே காரணமென பல்கலைக்கழக தொழிற்சங்கம் தெரிவிக்கின்றது. இந்த நிலைமையினால் பல்கலைக்கழக விரி வுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பாரிய பிரச் சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக தொழிற்சங்கம் சுட்டிக்காட்டுகின்றது.

உறுதியளித்தவாறு இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக தமது பிரச் சினைகள் தீர்க்கப்படாத பட்சத்தில் தாம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பல்கலைக்கழக விரி வுரையாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச் சாளர் கலாநிதி மஹீம் மெண்டீஸ் தெரி வித்துள்ளார்.

அரசாங்கம் கல்விசார ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்குத் தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு ஒருமாத கால அவகாசம் கோரியுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்க சம மேளத்தின் தலைவர் ஆர்.எம்.சந்திரபால குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் சம்பளப் பிரச் சினைக்கு தீர்வொன்று எட்டப்படாத பட் சத்தில் தாம் பாரிய தொழிற்சங்க நட வடிக்கையொன்றை முன்னெடுக்க இருப்பதாகவும் அவர் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

## பாரிய அசௌகரியங்களுக்கு மக்கள் முகம்கொடுக்க நேரிடும்



(கொழும்பு)

எதிர்வரும் சில மாதங்களில் பொது மக்கள் மேலும் பாரிய அசௌகரியங் களுக்கு முகம்கொடுக்க நேரிடும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். பொருட்களின் விலைகள் குறையாது எனவும், அவை தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் எனவும அவர் குறிப்பிட்டார்.

கண்டி - குண்டசாலையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.இந்த முறை உள் ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஆளும் கூட்டமைப்புக்கு வாக்குகளை பெற்றுக் கொடுத்தால் அது மக்கள் மீது இறக்கி வைக்கப்படும் பாரிய சுமை ஆகும்.

தொழில்வாய்ப்புகள் நாட்டில் அதி கரிக்காது. இதனையிட்டு எதிர்காலச் சந்ததியின் பெரும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்றார்.

இதேவேளை, எதிர்கட்சிக்கோ, ஜே.வி.பிக்கோ மாற்று யோசனைகள் இல்லை என பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் லகஷ்மன் யாப்பா அபே குணவர்தன தெரிவித்துள்ளார். சிலாபம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரை யாற்றிய போதே அவர் இதனைக் குறிப் பிட்டார்.

## 20 நாடுகள் பங்குகொள்ளும் ஆசிய திறன்விருத்தி மாநாடு

(கொழும்பு)

ஆசிய மற்றும் பசுபிக் வலயத்தில் 20 நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட ஆசிய திறனபிவிருத்தி அமைப்பின் வருடாந்த மாநாடு கொழும்பில் ஆரம்பமானது.விவசாய நிர்மாண பல்வகைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர்ப்பு என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் இந்த மாநாடு எதிர்வரும் 9 ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கை, இந்தியா, சீனா, ஈரான், காம்போச்சியா, மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட உறுப்பு நாடுகளின் விவசாய சேவைப் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் இன்று கலந்து கொண்டுள்ளனர்.தெற்கு மற்றும் பசுபிக் ஆசிய பிராந்தியத்தில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

## பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர் குறித்து முறையிடலாம்

(கொழும்பு)


பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர்கள் தொடர்பில் முறைப் பாடுகளை முன்வைப்பதற்கு வசதி கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக முதி யோருக்கான தேசிய செயலகம் குறிப்பிடுகின்றது. அவ்வாறான நபர் களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யமுடியும் என செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர் தொடர்பில் முதியோர் பராமரிப்புச் சபைக்கு விண ணப்பங்களை சமர்பிக்க முடியும்.

முதியோர் பராமரிப்புச் சபை யினால் குறித்த விண்ணப்ங்கள் பரி சீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என முதியோ ருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர். மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார். இந்த விண்ணப்பங்களை முதியோருக்கான தேசிய செயலகம் மற்றும் பிரதேசபைகள் ஊடாக பெற் றுக்கொள்ளமுடியும் எனவும் தெரி வித்துள்ளார்.


## (பௌதீகவியல்)

9. துணிக்கையொன்றின் இயக்கத்திற்கான இடப்பெயர்ச்சி-நேரவரைபு தரப்பட்டுள்ளது.
   1. இடப்பெயர்ச்சி என்பதனை விளக்குக.
   2. தரப்பட்ட வரைபில் கீழ்உள்ள வரைபின் பகுதிகள் மூலம் குறிக்கப்படும் இயக்கம் எத்தகையது எனக் கூறுக.
      அ) AB
      ஆ) BC
      இ) CD
      ஈ) DE
      உ) EF





   3. மேலுள்ள இடப்பெயர்ச்சி-நேரவரைபிற்கான இயகத்திற்கு வேக-நேர வரைபு ஒன்றைப் பருமட்டாக வரைந்து காட்டுக.
   4. இயக்கத்திற்கான சமன்பாடுகளைப் பெறுக.
   5. நியூட்டனின் இரண்டாம் விதிக்கான தொடர்பைப் பெறுக.
   6. 10 kg திணிவுடைய பொருளை 100 $ms^{-2}$ எனும் ஆர்முடுகலுடன் இயங்கச் செய்ய பிரயோகிக்க வேண்டிய விசையின் அளவு யாது?

10. இலங்கையில் அதிகரித்துவரும் மின்பாவனையை ஈடுசெய்வதற்கு மின்உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதற்காக பல வழிகளில் மின் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.
    1. மின் உற்பத்திகளாக இலங்கைக்கு ஏற்புடையதான மூன்று வழிகளைக் குறிப்பிடுக.
    2. நீர் குறிப்பிட்ட வழிகளில் உள்ள சாதகமான, பாதகமான இயல்புகளை அட்டவணைப்படுத்துக.
    3. மின்சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு நீர் கூறும் வழிகள் மூன்று தருக.
    4. வீட்டு மின்சுற்று அமைப்பதற்குத் தேவையான உபகரணங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தருக.
    5. பிரதான ஊடுகடத்தல் பாதையில் நிகழும் மின்வழங்கல் வோல்ற்றளவினைத் தருக.
    6. அ) வீட்டு மின்சுற்றில் 240V, 60W மின்குமிழ்கள் இரண்டு இணைக்கபட்டுள்ளதைக் காட்டுவதற்குப் படம் வரைக. மின்கம்பிகள், உபகரணங்களைத் தெளிவாகப் பெயரிடுக.
       ஆ) இவ்விரு மின்குமிழ்களும் தினமும் நான்குமணி நேரம் பயன்படுத்தப்படுமாயின் நவம்பர் மாதத்தில் செலவாகும் மின்சக்தியைக் கணக்கிடுக.
       இ) இம்மின்குமிழ் ஒன்றின் தடைப் பெறுமானத்தைக் காண்க.
    7. காபன் தடையியொன்று 430 ஓம் தடையுடையதாகும். இப்பெறுமானத்தை தடையியில் நிறக்கோட்டின் மூலம் குறித்துக்காட்டுக.
    8. வானொலி அலை ஊடுகடத்தலுக்கான திட்ட வரிப்படம் தரப்பட்டுள்ளது.
       அ) P,Q,R,S பகுதிகளைப் பெயரிடுக.
       ஆ) Q,R,S பகுதிகளின் செயற்பாட்டை விளக்குக.
       இ) வானொலிப் பெட்டியில் காணப்படும் பின்வரும் குறியீடுகளை விளக்குக.
       FM, AM, MW




    9. செய்மதி மூலமான ஒலி, ஒளி பரப்புக்கு பயன்படும் அலையினைப் பெயரிடுக.





இரா.செல்வ வடிவேல்

# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி


# கல்வி முரசு

## விஞ்ஞானம் பகுதி - II

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**


## உயிரியல் - A

1. மனித உடலின் சில பகுதிகள் படத்தில் காட்டப்பட்டுள்ளன.





   I. A,B,C,D, E பகுதிகளைப் பெயரிடுக.
   II. கசியிழையத்தினால் ஆக்கப்பட்ட பகுதி எது/எவை?
   III. சுவாசப்பாதையில் காணப்படும் இழைய வகையைப் பெயரிட்டு அதன் அமைப்பை வரைக.
   IV. பகுதி Eயில் காணப்படும் சிறப்பியல்புகள் நான்கு தருக.
   V. வளி உள்ளெடுக்கப்படுகையில் பகுதிகள் A,Dயின் நிலையை விளக்குக.
   VI. சுவாசச் செயற்பாட்டில் காற்றுச் சுவாசம், காற்றின்றிய சுவாசம் ஆகியவற்றை வேறுபடுத்துக.
   VII. தரப்பட்ட அமைப்புக்கும் பகுதி G இற்குமான இணைப்பை வரைக (அண்ணளவாக)

2. புவி ஓட்டிலுள்ள மூலகங்கள் தொடர்பு நிலையைப் படம் காட்டுகின்றது.




   1. அ). புவியோட்டில் இரும்பின் திணிவினது சதவீதம் யாது?
      ஆ). இரும்பில் அடங்கியுள்ள தாதுக்கள் எவை?
      இ) இரும்புத்தாது ஒன்றிலிருந்து இரும்பு எவ்வாறு பிரித்தெடுக்கப்படுகிறது என விளக்குக.
   2. அ). அலுமினியத்தின் மின் அரிப்படையாத தன்மைக்கான காரணத்தைத் தருக.
      ஆ) அலுமினியமும், மக்னீசியமும் கொண்ட கலப்பு உலோகம் ஒன்றைப் பெயரிடுக.
      இ) இக்கலப்பு உலோகத்தின் பயன் ஒன்று தருக.
   3. அ) கல்சியம் இயற்கையில் காணப்படும் சேர்வையின் குறியீட்டைத் தருக.
      ஆ) இச்சேர்வையிலிருந்து வெளிற்றும் தூள் தயாரிப்பதற்கான வழியைச் சம்பந்தப்பட்ட தாக்கங்கள் மூலம் காட்டுக.
   4. தைத்தேனியத்தின் குறியீட்டையும், அதன் பயன்பாட்டையும் தருக.
   5. சோடியம், பொற்றாசியத்தின் பயன்கள் தருக.

3. அலைவடிவம் ஒன்றைப் படம் காட்டுகிறது.





   1. அ) இத்தகைய அலையொன்றை நீர் எவ்வாறு பெறுவீர் எனக்கூறுக.
      ஆ) Bக்கும் Fஇற்கும் இடைப்பட்ட தூரம் எவ்வாறு அழைக்கப்படும்?
      இ) BX எவ்வாறு அழைக்கப்படும்?
      ஈ) B,D எவ்வாறு அழைக்கப்படும்?
   2. பொறிமுறை அலைகள் எவை?
   3. கழியூதாக் கதிர்களின் பயன்பாடு மூன்று தருக?
   4. கழியூதாக் கதிர்களின் தீமை ஒன்று தருக?
   5. X கதிர்களின் பயன் யாது?
   6. வளியினூடாக ஒலி அலைகள் செல்லும் சராசரி வேகம் யாது?
   7. ஒரு குழாயின் திறந்த அந்தத்தில் வாயை வைத்து ஊதிய போது கிடைத்த சுரத்தின் அதிர்வெண் 50 Hz ஆகும். குழாயில் ஏற்பட்ட அலையின் நீளம் யாது?

4. சூழலின் சமநிலையைப் பேணுதல் மனிதனின் பிரதான கடமையாகும்.
   1. வளிச்சூழலில் மாற்றத்தை ஏற்படுத்தும், வளிக்குள் சேரும் மூன்று பதார்த்தங்களைப் பெயரிடுக.
   2. வளியின் அமைப்பு மாற்றத்தினால் ஏற்படும் சூழல் பிரச்சினைகள் மூன்று தருக.
   3. மூன்றாம் உலகயுத்தம் நீருக்காகவா? எனப் பல இடங்களில் சமூக அமைப்புக்களினால் பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.
      அ. மனிதனுக்கு நீரின் தேவைப்பாட்டை விளக்குக.
      ஆ. நீரின் பண்பைப் பாதிக்கும் காரணிகள் எவை?
      இ. நீரின் வன்மையை எவ்வாறு அகற்ற முடியும்?
      ஈ. இலங்கையில் சில இடங்களில் வாழ்பவர்களின் பற்கள் நிரந்தரமாக மஞ்சள் கபில நிறமாக மாறுவது ஏன்?
   4. நல்ல பயிர்ச் செய்கைக்குரிய மண்ணின் பண்புகள் யாவை?
   5. வீட்டுடன் தொடர்புடைய இரசாயனப் பொருட்கள் மூன்று தருக.
   6. இவற்றின் தேவையை விளக்குக.

## உயிரியல் - B

**உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் பகுதிகளிலிருந்து தலா ஒவ்வொரு வினாவைத் தெரிந்து மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

5. அங்கிகளின் இனப்பெருக்கச் செயற்பாட்டிற்காக சில பகுதிகள் விசேடமாகக் காணப்படுகின்றன. இத்தகைய விசேட பகுதிகள் இன்றியும் சில அங்கிகளில் இனப்பெருக்கம் நடைபெறுகிறது.
   1. அ) விசேட பகுதிகள் இன்றி நடைபெறும் இனப்பெருக்கத்தை உதாரணம் மூலம் விளக்குக.
      ஆ) இம்முறையில் உள்ள சிறப்புத்தன்மையைக் கூறுக.




   2. மேலே தரப்பட்ட அமைப்பை இனங்கண்டு வினாக்களுக்கு விடைதருக.
      அ) இப்பகுதியைக் கொண்ட தாவரம் ஒன்றைப் பெயரிடுக.
      ஆ) இப்பகுதியில் காணப்படும் வேறுபட்ட அமைப்புச் சிறப்பு யாது?
      இ) இத்தகைய பகுதிகளில் பதார்த்தங்கள் சுரக்கப்படும் பாகங்களைக் குறிப்பிட்டு இச்சுரப்புகளின் அவசியத்தைக் கூறுக.
      ஈ) வாழைப்பழம், மாம்பழத்திலிருந்து வேறுபடுவது எவ்வாறு என விளக்குக.
   3. மனிதன் ஒரு பாலங்கி ஆவான். பால் வேறுபாட்டிற்கு இணங்க புறத்தோற்ற வேறுபாடுகள் மனிதனில் தெளிவானவை.
      அ) மனிதன் ஒரு பாலங்கி எனப்படுவது ஏன்?
      ஆ) பால் வேறுபாட்டு இயல்பு எவ்வாறு அழைக்கப்படும்? இதற்குக் காரணம் யாது?
      இ) புறத்தோற்ற வேறுபாட்டு இயல்பு எவ்வாறு ஏற்படுகிறது என விளக்குக.
      ஈ) I. மானிடப் பெண் இனப்பெருக்கத் தொகுதியின் பகுதிகள் எவை?
         II. மனிதனில் 'கருக்கட்டல்' என்பதனை விளக்குக. இதனால் தோன்றும் கலம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
         III பாலியல் நோய்கள் என்றால் என்ன? சிபிலிஸ், ஹேப்ஸ் சிம்பிளெக்ஸ் நோய்கள் பற்றிக் குறிப்பு எழுதுக.

6. மனிதனுக்கும் சூழலுக்கும் இடையிலான இணக்கமான தொடர்புகள் தகர்வடைந்து செல்வது பற்றி சூழலியலாளர்களால் கவனிக்கப்பட்டுள்ளது. சூழல் காப்பு என்னும் எண்ணக்கரு இதன் பொருட்டான பரிகாரமாக முன் வைக்கப்பட்டுள்ளது.
   1. சூழல் காப்பு என்பதன் மூலம் நீர் அறிந்து கொண்டது யாது?
   2. சூழலில் அவதானிக்கப்படும் ஒழுங்கமைப்பு மட்டங்களை பாச்சல் கோட்டின் மூலம் காட்டுக.
   3. அ) குடித்தொகை என்பதனை விளக்குக.
      ஆ) குடித்தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகள் எவை?
   4. சூழற்தொகுதியொன்றில் காணப்படும் உயிரிகளைப் பெயரிட்டு, அவற்றை விளக்குக.
   5. உயிரிக் கோளத்தின் நிலைபெறுகையின் பாலான பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்க.
   6. சூழல்மாசடைதல் என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?




## (இரசாயனவியல்)

7. 1. அ) வாயுக்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
      ஆ) நீர் குறிப்பிடும் காரணிகள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை விளக்குக.
   2. ஒரு முனை மூடிய, ஒடுங்கிய 50 cm நீளமான குழாய் ஒன்று எடுக்கப்பட்டு, இதனுள் 10cm நீள இரச நிரலால் வளியடைக்கப்படுகிறது.
      அ) வளிமண்டல அமுக்கம் 76cm இரசம் எனக்கொண்டு நிலை I இல் அடைக்கப்பட்ட வளியின் அமுக்கத்தை நியம அலகில் காண்க. (இரசத்தின் அடர்த்தி 1.36 X $10^4$ $kg_9m^{-3}$)
      ஆ) குழாயில் அடைக்கப்பட்ட வளியின் கனவளவை எவ்வாறு காண்பீர் என விளக்குக.
      இ) மூன்று நிலையிலும் அடைக்கப்பட்ட வளியின் அமுக்கப் பெறுமானத்தை பருமட்டாகத் தருக.
      ஈ) இவ்வுபகரண அமைப்மைப் பயன்படுத்தி உறுதிப்படுத்தக் கூடிய அடிப்படையைத் தெளிவாகத் தருக.




   3. அ) வாயுவின் கனவளவிற்கும், வெப்பநிலைக்குமான தொடர்பு பற்றிய விதியை எழுதுக. இதற்கான தொடர்பைத் தருக.
      ஆ) -273°C வெப்ப நிலையின் முக்கியத்துவத்தை விளக்குக.

8. ஆய்வுகூடத்தில் மாணவர்களால் அமைக்கப்பட்ட உபகரணத் தொகுதியொன்றைப் படம் காட்டுகிறது.




   1. இவ் உபகரணம் அமைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?
   2. கூம்புக்குடுவையில் நிகழக்கூடிய இரசாயனத் தாக்கத்தினை பூர்த்தி செய்து எழுதுக.
   3. இங்கு தயாரிக்கப்படும் வாயுவை, ஆய்வு கூடத்தில் சேகரிப்பதற்கான ஒழுங்கை வரைந்து பெயரிடுக.
   4. அ) சோதனைக் குழாயில் ஏற்படும் அவதானம் யாது?
      ஆ) இவ் அவதானங்களுடன் தொடர்புடைய இரசாயனத் தாக்கங்களைப் பூர்த்தி செய்து எழுதுக.
   5. சோதனைக் குழாயுடன் வளிப்பம்பி இணைக்கப்பட்டுள்ளது ஏன்?
   6. இங்கு கூம்புக்குடுவையில் நிகழக்கூடிய தாக்கத்தின் வீதத்தை அதிகரிக்கக் கைககொள்ளக் கூடிய வழிகள் இரண்டு தருக.
   7. பின்வரும் தேவைகளுக்குப் பயன்படும் வாயுக்களைப் பெயரிடுக.
      அ) யூரியா தயாரிப்பு
      ஆ) ரொக்கற்றுக்கு எரிபொருளாகப் பயன்படல்
      இ) குளிர்பானக் கைத்தொழிலில் பயன்படுத்தல்
      ஈ) உலோகங்களை ஒட்டுவதற்காக

சேகரம்

# காசினியை நேர்த்தியாக்கும் ஆசிரியம் காலத்தால் ஒருபோதும் தோற்பதில்லை

(நாளை ஆசிரியர்தினம் அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)

இன்று குருவைப் போற்றும் திருநாள் ஆசிரிய அவதாரத்தை வணங்கிப் போற்றுகின்ற சந்தர்ப்பம், ஒருவருடத்தில் ஒரு நாளிலாவது மாணவர்களுக்குக் கிடைத்திருப்பது, அவர்தம் பெற்றோர்களுக்கு மிகுந்த மகிழ்வினைக் கொடுக்கும் என் பதில் ஐயமில்லை. காரணம் ஒரு நாட்டின் விழுமியம், ஆசிரிய - மாணவர் பங்களிப்பிலேயே தங்கியுள்ளதெனலாம். அந்த வகையில் குரு வணக்கம் ஆற்றும் சமூகம் எமது நாட்டில் உயிர்ப்புடன் வேரூன்றியிருக்கின்ற செய்தியானது ஆசிரிய சமூகத்தினை ஊக்கமளிப்பதாகவுள்ளது.


புராதன காலத்திலிருந்து போற்றப்படும் மாதா, பிதா, குரு தெய்வ, இயற்கை வழிபாடுகள் மற்றும் ஒப்படைக்கப்படுகின்ற பாரம் பரியங்கள், எப்போது அலட்சியம் செய்யப்படுகின்றதோ அப்போதே ஒரு நாடானது தனது அடையாளங்களைக் கைகழுவி இழக்க நேரிடும். ஆனால் மனித குலத்தினை நேர்த்தியாக வெல்ல வைப்பதில் ஆசிரியம் ஒருபோதும் தோற்றதும் இல்லை. தோற்பதும் இல்லை மாறாக அதனைப் பொறுப்பாக்கும் பொறுபபாளிகள் அக்கடமைக்குப் போலிக் கௌரவம் அளிப்பார்களாயின் உலகம் நேர்த்தியாக இயங்கமுடியாது. ஆசிரியம் தூற்றப்படுவதற்கு யாருமே பங்காளிகளாக இருந்து விடமுடியாது. மாறாக இதனை போற்றப் படுவதற்காக இறைவன் பல சந்தர்ப்பங்களை ஒவ்வொரு குழந்தைகள் மூலமாக அருளியுள்ளான். அக்குழந்தைகளை நாட்டுக்கு ஏற்ற அறிவார்ந்த, பண்புள்ளதான ஒரு பிரஜை ஆக்குவதே ஆசிரியத்தின் கடமையாகும். இக் கடமையில் எங்கு, எப்போது தொய்வு ஏற்படுகிறதோ, அவை சீக்கிரமாக வீதிக்கு வந்துவிடும்.



ஆசிரியர்களாகப் பிறப்பவர்களோ, இறைவனுக்கு அடுத்தபடியாக ஏட்டிலும், நாட்டிலும், வீட்டிலும், உன்னதமாகப் போற்றப்படும் அறிவார்ந்த பாத்திரங்கள்- ஆம் அட்சய பாத்திரங்களே! இப்பாத்திரங்களை அலங்கரிப்பவர்கள் ஒவ்வொருவரும் தினம் தினம், கணம் கணம், அறிவைத் தேடுபவர்களாகவும், அறிவார்ந்த அனுபவங்களை வழங்குபவர்களாகவும், உயிர்ப்புடன் இருக்க வேண்டும். மேலும் கடமை நேரத்தினைக் கணக்குப் பார்க்காமல் அப்பாலும், கனவிலும் கூட ஒரு பாடசாலையைப் பற்றி, மாணவர்களைப்பற்றி, அவர்தம் வள்ர்ச்சிபற்றி எந்தவொரு ஆசிரியன் சிந்திக்கின்றானோ நேரம், காலம் பார்க்காமல் ஊட்டுபவன் இறைவன் தானே. ஆம் அர்ப்பணிப்புள்ள, அனுபவமுள்ள ஆசிரியர்கள் பலர் பயனுள்ள ஒரு சந்ததியை உருவாக்கியபோதும், தேசிய விருதுகளுக்கோ, பதவிகளுக்கோ விரும்பாமல் தங்களுடைய பணியை ஆற்றி வருகிறார்கள். இத்தகைய ஆசிரியர்கள் சமூகத்தால் போற்றப்பட வேண்டியவர்கள்.

கே. எஸ்.சிவஞானராஜா,
கொக்குவில்


## லிங்கனின் வாழ்க்கை வரலாறு நூலிலிருந்து...



அமெரிக்காவில், உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த சமயம். அப்போது, அமெரிக்க அதிபராக இருந்த ஆபிரகாம் லிங்கன், தன்னுடைய இராணுவத் தளபதி ஒருவர், போர் முனைச் செய்திகளை உடனுக்குடன் அனுப்புவதிலலை என்று கோபப்பட்டு, அவருக்குக் கடுமையான கடிதம் ஒன்று எழுதினார்.

ஆத்திரமடைந்த இராணுவத் தளபதி, “ஆறு பசு மாடுகளைக் கைப்பற்றியிருக்கிறோம். அவற்றை, என்ன செய்வது என்ற உத்தரவுக்காகக் காத்திருக்கிறோம்..” என்று குறிப்பிட்டார். தன்னுடைய எரிச்சலைக் காட்டுவதற்காகவே, அந்தத் தளபதி இவ்வாறு தந்தி கொடுத்தார்.

லிங்கன் கோபப்படவில்லை. கீழ்கணடவாறு பதில் தந்தி கொடுத்தார். “ஆறு பசு மாடுகளைப் பிடித்த உங்களுடைய தீரச் செயலைப் பாராட்டுகிறேன். அவற்றை என்ன செய்வது என்று கேட்டிருக்கிறீர்கள். காலை, மாலை இரண்டு வேளையும் தவறாது பாலைக் கறக்க ஏற்பாடு செய்யுங்கள்”.



# மனித ஆயுதம் “உலோகம்” ஒரு பார்வை

ஜெயமோகனின் ‘உலோகம் த்ரில்லர் நாவல் என்ற பெயரில் பார்த்ததும் வாங்கி வந்தேன். மூன்று மாதமிருக்கும். இன்றைக்குத்தான் படிக்க அமர்ந்தேன். 4 மணி நேரங்களில் கீழே வைக்க முடியாமல் படித்த ஒரு மனித ஆயுதம் பற்றின கதை அது.

ஈழ மொழியில் புனைவுத்தியில் சொல்லப்பட்டிருக்கும் கதை. சுஜாதா, ராஜேந்திரகுமார், ராஜேஷ்குமார் நாவல்கள் போலில்லாமல் வேறொரு மனம் சார்ந்த மொழியிலான த்ரில்லர். இந்தியாவின் உளவு அமைப்புக்கள் எந்த விதமான செயல்களில் ஈடுபடுகின்றன என அதில் படித்தபோது மனம் கனமானது. வன்முறையை வேரறுக்க வன்முறை. எதற்காக யாரைக் கொல்கிறோம், என மனச்சாட்சி இல்லாமல் இப்படி நடக்கும் கொலைகளைப் பகிர்ந்தது அதிர்ச்சியாக இருந்தது.

ரஸ்கோல்னிகோவின் மனநிலையை இதில் ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றியது. மிக வறண்ட வெறுமையான மனநிலை. ஒரு மாணவனாக தனித்த அறையில் (சவப்பெட்டி போன்றதொரு அறை) வாழும் ரஸ்கோல்னிகோவ் போல சார்ள்ஸ் அலைவதும் படிக்கும் காலத்தில் இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டு வரலாற்றில் இருகக விரும்பி வந்து வரலாற்றால் மூழ்கடிக்கப்பட்ட ஒரு மனிதனாய் ஆவதும் துயர்ச் சம்பவங்கள். நிஜமாக பாதிக்கப்பட்ட ஒருவன் வன்முறையைக் கைக்கொள்வதும்., பேச்சினாலும் சாகச உணர்வுகளாலும் ஈர்க்கப்பட்ட ஒருவன் வன்முறையைக் கையாள்வதும் ஒன்று போல தீவிரமாய் இருக்க முடியுமா.

சார்ள்சின் குடும் பம் பற்றி அவன் படிப்பு தவிர மற்ற நிகழ்வுகள் சரிவர தெரியவில்லை. இந்தியாவில் அவன் மனித ஆயுதமாக புகுத்தப்பட்டதன் பின்னணியில் யாரிடமிருந்து அந்த ஆணைகள் வருகின்றன எனவும் கடைசிவரை புரியவில்லை. எந்தக் குழுவுக்காக எந்தத் தலைமையிடம் இருந்து ஆணைகள் வருகின்றன என்பதும்.

பெண்களை அவன் ஜேம்ஸ் பொண்ட் படங்களில் வரும் ஹீரோ போல காதலோடே அணுகுகிறான். அதற்கு அவர்கள் உடன்படுகிறார்கள். பெண்ணைப் போல காமத்தைப் போல சாகசம் என்பதும் ஒரு வேட்டையாடும் மிருகமாக அவனை சித்தரிக்கிறது. தான் துன்பப்படும்போது மட்டும் கண்ணீர்விடும் அவனுடன் மனம் வருந்தினாலும் ஜோர்ஜ் இறக்கப் போகிறான் எனத் தெரிந்தும் மனதுக்குள் புன்னகைத்தபடி இருந்தது வெறுப்பை உண்டாக்கியது. எல்லா ஆண்களுக்கும் உள்ள இயல்பான பெண்களைப் போகப்பொருளாகக் கருதும் தன்மை அவனுடைய மனித ஆயுதம் என்ற பங்கிற்குப் பங்கம் ஏற்படுத்துகிறது. பொன்னம் பலத்தாரை மிகக் கோழையாகப் பார்த்தது, இப்படித்தான் சுயநல அரசியல் வாதிகளும் இருப்பார்களோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது. சிறீ மாஸ்டரைக் கொன்று, பின் கடைசியில் நிராயுதபாணியான பொன்னம் பலத்தாரையும் (இயக்கத்தில் தான் இருந்த காலத்தில் தன் பேச்சின் மூலம் பலரையும் ஈர்த்துக் கெடுத்திருந்தாலும்) கொன்றது மனித வெடிகுண்டு போன்று உலவியவர்களின் மனநிலையையும் செயல்பாடுகளையும் உணர்த்தியது.

வெறுப்பின் உச்சத்தில் ஆண்கள் போராளிகளாக மாறுவதும்., பெண்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்பவராக மாறுவதும் அகதிகள் குடியிருப்பும், அவர்கள் வாழ்வும் மிக வருத்தத்திற்குரியது.

இதில் வரும் வன்முறைகளை ரத்தவாசனையை ரசிக்கும் மனிதர்களை (ராம்கோபால் வர்மாவின் “த கம்பெனி” என்ற படத்தை) நினைவூட்டியது.. அம்பையின் ஆற்றைக் கடத்தல் என்ற நாடகத்தில் சீதை என்றால் ராமனின் மனைவியா, ஜனகனின் மகளா, தசரதரின் மருமகளா, ரவிவர்மாவின் ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டவளா என்றால் அதற்கு அவர் சொல்வார், என்னைப் பிரதிமைகளுடன், முன் முடிவுகளுடன், சாயல்களுடன் அணுகாதீர்கள் என்று. ஆனால் ஒரு விஷயத்தைக் கவனப்படுத்திக் கொள்ள அது சம்பந்தமாக நமக்குத் தெரிந்த விஷயங்களுடன் பொருத்திப் பார்ப்பது என்பது தவிர்க்க இயலாததாகிறது.

நாம் நேரடியாகப் பங்குபெறாத. அறிய முடியாத உணர்ந்து வாழாத ஒரு விஷயத்தைப் படங்கள் மூலமாவும் புதினங்கள் மூலமாகவும், வீடியோக்கள் மூலமாகவுமே தெரிந்து கொள்ள முடிகிறது. மனம் பல விஷயங்களைக் கோர்த்து அந்த சம்பவங்களைப் புரிந்து கொள்கிறது. அதன்படி உலோக நாயகனின் உள் புதைந்த உலோகத்திலிருந்து ஈயத்தினாலான தளிர்களும் ஈய இலைகளும் கொண்ட செடி முளைப்பதான கற்பனை, நிராதரவாக மணற்தேரியில் விட்டுச்செல்லும் படகு தம்மைவிட்டு தூரச் செல்லும் தாய்நாடுபோல் தோற்றம் தருவதும், இது இலக்கிய நயம் வாய்ந்த சாகசப் புதினம்.

ரெஜினாவும்., வைஜெயந்தியும் எல்லாவற்றையும் சகஜமாக எடுத்துக் கொள்வது கொஞ்சம் அதிர்ச்சியளித்தது. பெண்களுக்கு சுயகௌரவம் என்ற ஒன்றே இல்லையா. உயிர் வாழவும் சௌகர்யமாய் வாழவும்., என்ன குற்றம் வேண்டுமானாலும் செய்வார்களா. தந்தையைக் கொல்ல பேரம் பேசுவது, கணவனைக் கொனறவனுடன் இருப்பது எல்லாம் ஜீரணிக்க முடியவில்லை.

துப்பாக்கியைக் கையில் வாங்கியதும் ஒப்புக் கொடுப்பதற்காகவே உடலெடுத்தது அது என்பதும், கைகளின் வெற்றிட வெளியை நிரப்புகிறது என்பதும்., கருங்கல்., கோடாலியாகி, வில்லாகி., வாளாகி, துப்பாக்கியாகப் பரிணாமமெடுத்ததை ஜெயமோகனின் எழுத்தில் படித்தபோது ஒரு துப்பாக்கியை நேரடியாகவே தொட்டுப் பார்க்கவேண்டும் என்ற ஆவலை உருவாக்கியது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த வன்முறை என்பது எப்படி மனிதர்களை சாகச வலை போட்டு ஈர்க்கிறது என உணர்ந்து கொண்டேன் அப்போது. மணி 4 ஆகிவிட்டபடியால் ஒரு மணல்தேரியில் படுத்து ஜன்னல் வழி நிலவையும், இரவு விளக்கையும் பார்த்துக் கொண்டே அடுத்த படகுக்காகவும் அடுத்த கட்டளைக்காகவும் காத்திருக்கும் ஒரு மனித ஆயுதமாக உணர்ந்தபடியே இருந்தேன்.

தேனம்மைலெக்ஷ்மணன்

# அழிந்த பைல்களை மீட்க 2 மென்பொருட்கள்

ஹாட்டிஸ்கில் அல்லது யு.எஸ்.பியில் சேமித்து வைத்திருந்த முக்கியமான ஒரு பைலை தவறுதலாக அழித்து விட்டீர்களா? கவலை வேண்டாம். அழித்த பைல்களை மீட்டுக்கொள்ளலாம். அது எப்படி சாத்தியம்? இதற்கான இரண்டு மென்பொருட்கள். ஒன்று டிஸ்க் டிக்கர் (Disk Digger) இன்னொன்று ரெகுவா (Recuva) . இவை இரண்டினுடைய தொழிற்பாட்டையும் பார்ப்போம்.

1.டிஸ்க் டிக்கர் (Disk Digger):-

கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க் !மட்டுமின்றி பிளாஷ் டிரைவ், டிஜிட்டல் கேமரா மெமரி மற்றும் பிற மெமரி மீடியாக்களில் அழித்த பைல்களையும் மீட்டுத் தரும் என்பது இதன் சிறப்பு. மீண்டும் போர்மட் செய்யப்பட்ட அல்லது சரியாகப் பார்மட் செய்யப்படாத டிஸ்க்குகளில் இருந்தும் பைலகளை மீட்டுத் தரும் என்பது கூடுதல் சிறப்பு. Disk Digger ஒரு இலவச புரோகிராம்.

தரவிறக்கம் செய்ய : http://diskdigger.en.softonic.com/?gclid=CNzt0J6nzqsCFQl76wodxVNqUg


**2.ரெகுவா(Recuva):-**

இந்த புரோகிராம் பயன்படுத்த எளிதானது. இது உங்களுக்கு அழிந்த பைல் குறித்து என்ன மாதிரி உதவி தேவை என இந்த புரோகிராமே கேட்டு வழி நடத்துகிறது. எடுத்துக் காட்டாக ரீசைக்கிள் பின்னிலிருந்தும் அழித்த பைல்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் திரும்பக் கிடைத்தன. இழந்த பைல்களை மீட்பதில் இந்த புரோகிராம் அனைத்து வகை உதவிகளையும் தருகிறது என்பதில் சந்தேகமில்லை.

தரவிறக்கம் செய்ய : http://www.softpedia.com/redir2.php?pid=100063417

கணினி முலை

# தெலுங்கானாப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசாங்கம் முயற்சி செய்யும்



(புதுடில்லி)

தெலுங்கானா பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்றும் தனித் தெலுங்கானா கோரிக்கையை தாம் புரிந்துகொண்டிருப்பதாகவும் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

தெலுங்கானாப் பிராந்தியத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று பிரதமரை அவரது இல்லத்தில் சந்தித்தபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தெலுங்கானா பகுதியில் பொது வேலைநிறுத்தம் 22 ஆவது நாளை எட்டியிருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு நடந்தது.

காங்கிரஸ் குழுவில் மாநில அமைச்சர்களான கீதா ரெட்டி, ஜனா ரெட்டி மற்றும் பேடபள்ளி எம்.பி. ஜி. விவேகானந்த், நிஜாமாபாத் எம்.பி. மது கொடு உள்ளிட்ட மூத்த தலைவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

தெலுங்கானாப் பிரச்சினை குறித்து காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் பேசுவதாகவும் காங்கிரஸ் கட்சியின் உயர்நிலைக் குழுவிடம் தங்கள் கோரிக்கையை எடுத்துரைப்பதாகவும் பிரதமர் கூறியதாக அக்குழு தெரிவித்தது.

பிரதமரிடம் தெலுங்கானாப் பகுதியில் தற்போதுள்ள நிலவரங்களை எடுத்துரைத்த அவர்கள், மத்திய அரசின் தலையீடு அவசரமாகத் தேவைப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினர்.

வரவிருக்கும் பண்டிகைகளைக் கொண்டாடக்கூட மனமின்றி அப்பகுதி மக்கள் இருப்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

காலம் கடந்துகொண்டிருப்பதால், தனித் தெலங்கானா கோரிக்கை குறித்து முடிவெடுக்க கால வரையறை ஒன்றை மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என அக்குழு கோரிக்கை வைத்தது.தனித் தெலங்கானா உருவாகும் நிலையில், ஹைதராபாத்தில் வாழும் தெலுங்கானா அல்லாத பகுதி மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும் எனப் பிரதமரிடம் தாங்கள் தெரிவித்ததாகவும் அவர்கள் கூறினர்.

## தணியாத ஸ்பெக்ட்ரம் விவகாரம்

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பாக, நிதி அமைச்சகம் அனுப்பிய குறிப்பில் இடம்பெற்றுள்ள விஷயங்களில், தனக்கு உடன்பாடு இல்லாத விஷயம் எது என்பதை, நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவிக்க வேண்டும் என, பா.ஜ., மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி கூறியுள்ளார்.

பா.ஜ., மூத்த தலைவர் முரளி மனோகர் ஜோஷி இது தொடர்பாக கூறுகையில்,

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக, பிரதமர் அலுவலகத்துக்கு, நிதி அமைச்சகம் சார்பில் அனுப்பப்பட்ட குறிப்பு சமீபத்தில் வெளியாகி, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்தக் குறிப்பு, நிதி அமைச்சகத்தால் அனுப்பப்பட்டது தான் என ஏற்றுக்கொண்ட பிரணாப் முகர்ஜி, ஆனால், அதில் இடம் பெற்றுள்ள யூகத்தின் அடிப்படையிலான விஷயங்களுக்கும், தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறினார்.

## சினிமாவில் நடிக்கத் தடை



(சென்னை)

பிரபல மலையாள நடிகை வித்யா மேனனுக்கு சினிமாவில் நடிக்க தடைவிதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரபல மலையாள நடிகையான. வித்யாமேனன் மலையாளத்தில் ஆகாஷ்கோபுரம் என்ற படத்தில் அறிமுகமானார்.

இவர் தமிழில் 180, வெப்பம் ஆகிய படங்களில் நடித்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன் பிரபல மலையாள சினிமா தயாரிப்பாளர் ஆண்டோ ஜோசப் வித்யாமேனனை தனது படத்தில் ஒப்பந்தம் செய்வதற்காக பார்க்க சென்றார். ஆனால், அவர் தயாரிப்பாளரை சந்திக்க மறுத்து அவமதித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து வித்யாமேனன் மலையாள படத்தில் நடிக்க தடை விதிக்கக் கோரி மலையாள நடிகர் சங்கமான அம்மாவிடம் மலையாள சினிமாத் தயாரிப்பாளர் சங்கம் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

தென்னிந்திய தயாரிப்பாளர் சங்கத்திற்கு இது குறித்த தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. இதை ஏற்று, வித்யாமேனனுக்கு மலையாளப் படத்தில் நடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதேபோல் தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் தடை விதிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

# தமிழகத்தில் கள்ளநோட்டு பொலிஸார் கடும் சோதனை

(சென்னை)

பாகிஸ்தானில் அச்சடிக்கப்பட்ட கள்ள நோட்டுகளை சென்னையைச் சேர்ந்த ஒரு கும்பல் தமிழகம் முழுவதும் புழக்கத்தில் விட்டுள்ளது. இந்தக் கும்பலை கைது செய்ய நெல்லையில் இருந்து தனிப்படையினர் சென்னை விரைந்துள்ளனர்.

இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் எண்ணத்தில் பாகிஸ்தானிலிருந்து 100, 500, 1000 கள்ள நோட்டுகள் தயாரிக்கப்பட்டு இந்தியாவிற்குள் அதிகளவில் புழக்கத்தில் விடப்பட்டு வருவதாக உளவு துறையினர் மத்திய, மாநில அரசுகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து கடந்த இரு வாரத்திற்கு முன் டெல்லியில் அனைத்து மாநில பொலிஸ் உயரதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் கள்ள நோட்டுகளைக் கடத்துபவர்கள் மற்றும் அதனை விநியோகத் தில் விடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், அவர்கள் எளிதில் பிணையில் வர முடியாத அளவுக்கு தண்டனை பிரிவுகளில் சில மாற்றங்களை செய்யவும் முடிவு செய்யப்பட்டது.


இதன் பேரில் தமிழக டி.ஜி.பி ராமானுஜம் அனைத்து மாவட்ட எஸ்பிக்களுக்கும் ஒரு உத்தரவு பிறப்பித்தார். நெல்லை எஸ்பி



விஜயேந்திரபிதரி உத்தரவின் பேரில், நெல்லை மாவட்ட சோதனை சாவடிகளில் பொலிஸார் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாகவும், கள்ள நோட்டுக்கள் கடத்தலையும் தடுக்கும் பொருட்டு வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## விஜயகாந்த் சென்ற வாகனத்திற்கு கறுப்புக்கொடி காட்டியோர் கைது

(சென்னை)



தே.மு.க தலைவர் விஜயகாந்திற்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை 5.40 மணியளவில் நெல்லை பாளையங்கோட்டையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிவிட்டு டவுன் வாகையடிமுனை நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது வண்ணார்பேட்டை மேம் பாலம் பகுதியில் சிலர் விஜயகாந்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பி கறுப்புகொடி காட்டினர். ஆனால் அதற்கு முன்பாகவே விஜயகாந்த் வந்த பிரசார வாகனம் மற்றும் பாதுகாப்பு பொலிஸாரின் வாகனங்கள் கடந்து விட்டன. கறுப்புக்கொடி தொடர்பாக ஜான்பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் கண்மணி மாவீரன் உள்ளிட்ட 10 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

## வயது குறைந்த பெண்களைத் திருமணம் செய்வோருக்கு காத்திருக்கிறது சிறை

(சென்னை)

பாரிமுனையைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர், சென்னை உயர்நீதிமன்றம் தாக்கல் செய்துள்ள ஆட்கொணர்வு மனுவில், எனது மகளுக்கு 18 வயது பூர்த்தியாகவில்லை. அன்பு என்பவர் அவ்ரைக் கடத்திச் சென்று திருமணம் செய்து கொண்டார். மைனரான என் மகளை என்னிடம் ஒப்படைக்க உத்தர விட வேண்டும் என கூறியிருந்தார்.

இந்த வழக்கை நீதிபதிகள் கே.என். பாட்ஷா, சுதந்திரம், நாகமுத்து ஆகியோர் விசாரித்தனர். இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் நீதிபதிகள் அளித்த தீர்ப்பில்,

குழந்தை திருமணத் தடைச் சட்டத்தை பொலிஸார் தீவிரமாக அமுல்



படுத்த வேண்டும். வயது குறைந்த திருமணம் செய்யும் ஆண்கள் மீது சட்டப்படி வழக்குப் பதிவு செய்து, புலன் விசாரணை நடத்தி குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய வேண்டும். இதில் அதிகபட்சம் 2 ஆண்டு சிறைத் தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறினார்.

## ஜனார்த்தன ரெட்டி வீட்டில் சி.பி.ஐ. மீண்டும் சோதனை

கர்நாடக முன்னாள் அமைச்சர் ஜனார்தன ரெட்டியின் மனைவி லட்சுமி அருணா, கூட்லகி தொகுதி எம்.எல்.ஏ. நாகேந்திரா வடுகளில் சி.பி.ஜ அதிகாரிகள். நேற்றுமுன தினம் திடீர்ச்சோதனை நடத்தினர். குவாரி முறை கேடு தொடர்பாக கர்நாடக முன்னாள் அமைச்சர் ஜனார்தன ரெட்டியை ஆந்திரா மாநில சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த மாதம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

அவரது வீட்டில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரிடம் நடத்திய விசாரணையில் கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் மட்டுமில்லாமல், மொரிஷியஸ் உட்பட 6 நாடுகளில் தேவி அருணா பிராமணி இரும்புக் கம்பெனி என்ற பெயரில் தொழிற்சாலை நடத்தி வருவது தெரிய வந்தது.

கர்நாடகாவில் பெல்லாரி மாவட்டத்தில் வெட்டி எடுத்த இரும்புத் தாதுகளை சீனாவில் இயங்கி வரும் போம் என்ற நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்தனர். அதில் கிடைத்த இலாபத்தில் வெளிநாடுகளில் தொழிற்சாலை தொடங்கினர். சில நாடுகளில் உள்ள பெரிய தொழிற்சாலைகளில் முதலீடு செய்துள்ளதாகவும் சி.பி.ஐ விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் ஜனார்தனரெட்டியின் மனைவி லட்சுமி அருணாவுக்கு சொந்தமான எம்.ஏ.சி. மைனிங் கம்பெனி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சி.பி.ஐ. அதிகாரிகள் திடீர்ச்சோதனை நடத்தி பல ஆவணங்களை பறிமுதல் செய்தனர்.



தூவல் நீர்ப்பாசன முறையில் வாழை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டத்தை சேர்ந்த வ.சின்னக்குப்பம், செங்குறிச்சி, சேந்தமங்கலம், விஜயங்குப்பம், களமருதூர், கிளாப்பாளையம், சேந்தநாடு, தொப்பையான்குளம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது தூவல்நீர் பாசன முறையில் சிசு வளர்ப்பு வாழை சாகுபடி செய் வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

# செவ்வாயில் அதிகளவு தண்ணீர்

உலகச் செய்திகள்

(வோஷிங்டன்)

செவ்வாய்க் கிரகத்தில் எதிர்பார்த்ததை விட 100 மடங்கு அதிகம் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் ஆச்சரியம் அடைந்துள்ளனர். அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம்,



ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி, மற்றும் சர்வதேச விண்வெளி விஞ்ஞானிகள் குழுவினர் 'சிவப்பு கிரகம்' என அழைக்கப்படும் செவ்வாய்க் கிரகம் குறித்து ஆய்வு மேற் கொண்டு வருகின்றனர். அந்தக் கிரகத்தின் காற்று மண்டலத்தில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதை கண்டறிந்தனர். அவை ஓரளவு தான் உள்ளது என விஞ்ஞானிகள் கணித்து இருந்தனர்.

ஆனால் தற்போது செவ்வாயக் கிரகத்தின் காற்று மண்டலத்தில் அவை ஆவி நிலையில் பறந்து விரிந்து கிடக்கிறது. துகள்கள் மற்றும் தூசிகள் போன்று காற்றில் மிதக்கின்றன. அவை காற்று மண்டலத்தில் ஆங்காங்கே மேகக் கூட்டம் போன்று இருக்கின்றன. எனவே செவ்வாய்க் கிரகத்தில் எங்கும் தண்ணீர் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# தலிபான்களுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் தயாராகவுள்ளது

## - பிரதமர் யூசுப் ரசா கிலானி

(இஸ்லாமாபாத்)

எவ்வித முன் நிபந்தனைகளும் இன்றி தலிபான்களுடன் பேச்சு நடத்த தமது அரசு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்:

எனது அரசு தலிபான்களை நல்லவர்கள் அல்லது கெட்டவர்கள் என்று பார்க்கவில்லை. அவர்களை தலிபான்களாகவே பார்க்கிறது. அமெரிக்க அரசு அவர்களுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளது. மவுல்வி பஸ்லுல்லாவுடன் அரசு ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டு அதன் அடிப்படையில் பேச்சு நடத்தி வந்தது.ஆனால் பஸ்லுல்லா ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு, பாதுகாப்பு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார். அதனால் தான் ஸ்வாட் பழங்குடியினர் அவரை எதிர்த்து வருகின்றனர்.

தலிபான்களுடன் அமைதிப் பேச்சுக்கு முதலில் முன்னுரிமை அளிக்கப்படும். ஒரு வேளை பேச்சு தோல்வியடையும்பட்சத்தில் பழங்குடியினப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் தலிபான்களை ஆயுதங்களைப் போட்டு விட்டு வரும்படி நிபந்தனைகள் எதுவும் நாங்கள் விதிக்கவில்லை. ஏனெனில் ஆயுதங்களுடன் இருப்பது தான் பழங்குடியினர் பண்பாடு. இந்தப் பேச்சுவார்த்தைகள் அனைத்தும், நாடாளுமன்ற குழு ஒன்றால் கண்காணிக்கப்படும். இந்தக் குழு விரைவில் அமைக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

# ஓசோனில் ஓட்டை விஞ்ஞானிகள் அறிவிப்பு

(ஜப்பான்)

பூமியின் வட துருவமான, ஆர்க்டிக் பகுதியின் வான்வெளியில் ஓசோன் மண்டலத்தில், ஓட்டை விழுந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


இந்த ஓட்டை, ஆண்டு தோறும் குளிர் காலமான செப்டெம்பர் - ஒக்டோபர் மாதங்களில் தென் துருவமான அன்டார்டிக்கின் மேல் பகுதியில் விழும் ஓட்டை அளவுக்கு இருப்பதாகவும் அக்குழு தெரிவித்துள்ளது. இத்தகவல், பிரிட்டனில் இருந்து வெளிவரும், "நேச்சர்" இதழில் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து, "நாசா"வின் மிக்கேல் சான்டீ கூறுகையில், "பூமியிலிருந்து, 10 முதல் 50 கிலோ மீற்றர் வரை பரவியுள்ள ஸ்ட்ரோட்டோஸ்பியர் என்ற வளிமண்டல அடுக்கில், குளிர் காலத்தில் பொதுவாக, சில இடங்களில் வெப்பமாகவும் சில இடங்களில் குளிராகவும் இருக்கும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக அந்த அடுக்கின் அனைத்துப் பகுதிகளிலும் குளிராகவே இருக்கிறது. இதனால், குளோரின்



வெளியீடு அதிகரிக்கும். அப்படி அதிகரித்தால் ஓசோனில் உள்ள ஓட்டை அதிகமாகவே செய்யும்" என்றார். இதன் விளைவுகள் குறித்து, அக்குழு தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது.

# 2040இல் உலகம் முழுவதும் டிஜிற்றல் மயமாக மாறும்



(வோஷிங்டன்)

உலகம் முழுவதும் பேப்பரின் பயன்பாடு குறைக்கப்பட்டு அதற்கு பதிலாக டிஜிற்றல் மயமாக மாறும் என அமெரிக்காவின் இன்ட லக்சுவல் பிரபார்ட்டி அமைப்பின் தலைவர் பிரான்சிஸ் கரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: வரும் 2040ஆம் ஆண்டிற்குள் உலகம் முழுவதும் டிஜிற்றல் மயம் ஆக்கிரமித்திருக்கும்.

அமெரிக்காவில் வரும் 2017ஆம் ஆண்டிற்கு பின்னர் பேப்பரின் பயன்பாடு படிப்படியாக குறைய ஆரம்பிக்கும். அதற்கு முன்னோடியாக தற்போது கடைகளில் விற்பனை செய்யப்படும் புத்தகங்கள் டிஜிற்றல் முறைக்கு மாறி வருகின்றன.

இதனால் ஆசிரியர் மற்றும் பதிப்பகங்களுக்கு வருமான இழப்பு ஏற்படும் என்ற அச்சம் கொள்ளத்தேவையில்லை. காரணம் பதிப்புரிமை பெறுவதன் மூலம் வருமானத்தை ஈடு செய்ய முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதிகள் தொடர்பில் பாகிஸ்தான் இரட்டைவேடம்




ஆயுததாரிகள் தொடர்பாக பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுவதாக ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் குறிப்பிட்டுள்ளார்.

தமது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.எனினும் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

தமது நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பேனூதீன் ரப்பானியை பாகிஸ்தானியர் ஒருவரே கொலை செய்ததாக ஆப்கானிஸ்தான் தெரிவித்ததை தொடர்ந்து கர்சாய் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.இந்த கொலைக்கு ஹக்கானி அமைப்புடன், பாகிஸ்தானின் புலனாய்வுப் பிரிவையும் ஆப்கானிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ள போதிலும், இந்தக் குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது.

# மெய்தான் பாருங்கோ...

## ஒரு அன்பான வேண்டுகோள்



நான் இப்ப இந்தப் பக்கத்தால வந்தாப்போல ஒரு விசயம் சொல்ல வாறன். நான் சொல்லுற விசயத்தோடை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொஞ்சம் கவனமெடுத்தால் அல்லது அதுக்கு ஏதும் விளக்கம் தந்தினமெண்டால் நல்ல உதவியாய் இருக்கும் பாருங்கோ!

அதென்னண்டாப் பாருங்கோ இப்ப கடைசியா மீள்குடியேற்றம் செய்த புதுக்குடியிருப்பு - கோம்பாவில் சனங்களின்ர வேண்டுகோளும் விருப்பமுமாக் கிடக்குது இது.

உங்களுக்கு எங்கட வன்னிச் சனத்தின்ர வாழ்க்கை நிலைப்பாடு புரியும் தானே! எங்களைப் புரிஞ்சு கொள்ளாமல் 'ஓணான் முகம்' காட்டி அரசியல் நடத்துற ஆட்களைப் பற்றி நான் இப்ப இதில எதுவும் சொல்லவரேல்ல. சந்தர்ப்பத்துக்கேற்ற மாதிரி வேலியில ஓணான் இருந்து தலையாட்டுகிற மாதிரி எங்கட பிரச்சினையளைச் சந்திக்க வலுவில்லாத ஆட்களை இப்ப இதில ஒதுக்கி வைச்சிட்டு, நான் நேர விசயத்துக்கு வாறன்.

அதென்னண்டாப் பாருங்கோ! வன்னியில சண்டை நடக்கேக்கை எங்கட சனங்கள் எடுக்கக்கூடிய சாமானுகளை எடுத்துக்கொண்டு ஓடினதுகள் தானே!

காணி உறுதியள்... வங்கிப் புத்தகங்கள்... வாகன லைசென்சுகள்... அடையாள அட்டையள்... நகையள் நட்டுகள் ... காசுகள் எண்டு எடுக்கக்கூடியதை முக்கியமானதை எடுத்துக் கொண்டு இடம் பெயர்ந்து சீவிச்சதுகள். இந்தச் சீவியப்பாட்டுக்கை இயக்கமும் சனத்தோடை சனமா இருக்க, ஷெல்லடிகளும், கிபிர் பிளேன் போட்ட குண்டுகளுக்கையும் செத்துப்போனதுகள். எல்லாச் சனங்கள் மட்டுமில்லைப் பாருங்கோ அதுகளின்ர முக்கியமான ஆவணங்களும் தான்.

போறது போகட்டும்... துலையுறது துலையட்டும்... உயிரோடு தப்பினாக்காணும்.. எண்ட எண்ணத்தோடை ஒவ்வொரு இடமாக ஒவ்வொரு பொருளாத் துலைச்சுப்போட்டு, கடைசியில உடுத்த உடுப்போடை ஆமிக்காரனிட்டை போய்ச் சேந்த சனங்கள் எக்கச்சக்கம் கண்டியளே!.

இப்ப ரண்டு வருசத்துக்குப்பிறகு மீள்குடியேற்றமெண்டு வந்தாப்போல, எங்கட சனங்கள் சில முக்கியமான ஆவணங்களுக்காக அல்லாடித் திரியுதுகள். கச்சேரி அலுவல்களுக்கு முல்லைத்தீவுக்கும் காணி சம்பந்தமான விசயங்களுக்கு ஏ.ஜீ.ஏட்டை விசுவமடுவுக்குமா அலையுறதில சீவன் போய் வாறமாதிரி இருக்குது.

அதுவும் போருக்கை அம்பிட்ட உந்த வன்னி றோட்டுகளில பஸ்சில போய்வாறதெண்டா அதுக்கொரு பயிற்சி எடுக்க வேணும் பாருங்கோ. முல்லைத்தீவுக்கும் - விசுவமடுவுக்கும் அடிக்கடி பஸ்சில போய்வர சாதாரண கூலிவேலை செய்து பிழைக்கிற ஆட்களுக்கு கட்டுபடியாகாது பாருங்கோ. அலுவலாப்போனா அங்கை உள்ள அரச உத்தியோகத்தர்மார் உடன காரியங்களைச் சட்டுப்புட்டெண்டு முடிச்சு குடுத்தினமெண்டால் பரவாயில்லை. அவையளுக்கும் ஆயிரம் வேலைச் சுமை இருக்கலாம் கண்டியளே!

அதனால நான் என்ன சொல்லவாறனெண்டால், போருக்குள்ள துலைஞ்சுபோன ஆவணங்களை மீளப் பெறுகிறதுக்கு குறிப்பாச்சொல்லுறதெண்டா பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை சம்பந்தமான விசயங்களைப் பெறுகிறதுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரியள் ஒரு 'நடமாடும் சேவை' ஒண்டை ஆரம்பிக்கலாம் தானே.

முந்தி இயக்கம் இருக்கேக்கை உப்பிடி நடமாடும் சேவை செய்ததில எத்தனையோ சனங்கள் கரைச்சல் இல்லாமல் தங்கட காரியங்களைப் பெறுகிறதுக்கு வசதியாயிருந்ததல்லோ. என்ன மறந்து போணியளே?

பிள்ளையளைப் பள்ளிக்கூடத்தில சேக்கிறதுக்கு பிள்ளையளின்ர பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இப்ப அவசியமாகக் கிடக்குது பாருங்கோ. எங்கட புதுக்குடியிருப்புச் சனங்கள் விரும்புற மாதிரி அதோடை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிப் பேசிக் கதைச்சு ஒரு முடிவெடுத்து, ஒரு நடமாடும் சேவையை ஆரம்பித்தால் நல்லாயிருக்கும் கண்டியளே!

புதுக்குடியிருப்பில மற்றச் சனங்களும் குடியேறினாப் போல இதைச் செய்யலாம்... எண்டு நினைக்காமல் இப்ப எல்லாவளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கிற எங்கட சனத்தின்ர மன உணர்வுகளைப் புரிஞ்சு காரியமாற்றினால் கொஞ்சம் கஷ்டம் குறைஞ்ச மாதிரியிருக்கும் பாருங்கோ!

மக்கள் சேவையே மகேசன் சேவை...! என்று மனதார விரும்புகிற அரச அதிகாரிகள் இந்த விடயத்தில கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டுமெண்டு எதிர்பார்க்கிறம். அதோடை இதில ஏதும் சிக்கல் புக்கல் இருக்குதெண்டால், அதையொருக்கா சனங்களுக்கு தெரியப்படுத்தினால் எப்பன் ஆறுதலாக இருக்குமல்லோ...செய்வியளே....?

**- சின்னக்குட்டி சின்னச்சாமி**

# அமெரிக்க குடிவரவு விசாவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கிறீன் கார்ட் லொத்தர் என்று அழைக்கப்படும் 2013ஆம் ஆண்டுக்கான அமெரிக்க குடிவரவு விசா பெறுவதற்கான குழுக்களுக்கான இணையத்தள மூலமான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் அறிவித்துள்ளது.

இந்த விஸாவுக்காக இலங்கை மற்றும் மாலைதீவு உட்பட பல நாடுகளிலிருந்து 50,000 பேர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு அமெரிக்காவில் சட்ட ரீதியாக வசிப்பதற்கு அல்லது படிப்பதற்கு அல்லது கல்வி கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். இந்த கிறீன் கார்ட் லொத்தர் பதிவினை www.dvlottery.state.gov என்ற இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும். அதேவேளை, கிறீன் கார்ட் லொத்தர் தொடர்பான மேலதிக தகவல்களை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பெறுவதற்கு srilanka.usembassy.gov/visas/diversity-visa-lottery-program.html எனும் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தின் இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.

ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படும் கீறின் கார்ட் லொத்தருக்கான பதிவுக் கட்டணம் முற்றிலும் இலவசமாகும். ஒரு நபர் குறித்த கிறீன் கார்ட் லொத்தருக்கு ஒரு தடவை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். ஒரு தடவைக்கு மேல் விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இதேவேளை, தாமதங்களை தவிர்ப்பதற்காக முன்னரே விண்ணப்பிக்குமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கு தெரிவு செய்யப்படுபவர்கள் அடுத்த வருடம் மே முதலாம் திகதி முதல் www.dvlottery.stat.gov என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவு இலக்கத் தினைப்பெற முடியும். வெற்றியாளர்களுக்கு தபால், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி ஊடாக அறிவிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்களின் பெறுபேறு அறிவுறுத்தல்கள் தொடர்பான விடயங்கள் www.dvlottery.stat.gov என்ற இணையத்தளத்தின் ஊடாக மாத்திரமே வழங்கப்படும். கிறீன் கார்ட் லொத்தர் ஊடாக தெரிவு செய்யப்படுபவர்களுக்கு அமெரிக்கா செல்ல ஒரு வருட காலம் வழங்கப்படும்.

இதேவேளை, இந்தக் கிறீன் கார்ட் லொத்தர் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் வெளியாட்கள் எவரையும் நியமிக்கவில்லை என உறுதியாக தெரிவித்துள்ளது. வெளியாட்களிடம் பல மில்லியன் பணம் செலுத்தி கிறீன் கார்ட் லொத்தர் விண்ணப்பங்களை பெறுவதற்கு அமெரிக்க அரசாங்கம் பொறுப்பில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

## கொள்ளைக் கோஷ்டியினர் சுற்றி வளைத்துக் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களிலும் மிக நீண்டகாலமாக பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த பாரிய கொள்ளைக் கோஷ்டி ஒன்றை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் சுற்றிவளைத்து கைது செய்ததாக மாவட்ட தலைமையக பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சித் வனராஜா தெரிவித்துள்ளார். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவெட்டவின் பணிப்புரையின் பேரில் தலைமையக பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சித்வனராஜாவின் வழிகாட்டலில், தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி கே.சாந்தகுமார் தலைமையில் இச்சுற்றி வளைப்பு நடாத்தப்பட்டு களவாடப்பட்ட பொருட்களும் கைபற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்களிடமிருந்து 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் கம்பியூட்டர்கள் ஒலிபெருக்கிச் சாதனங்கள் தங்க நகைகள் உட்பட பெருமளவிலான பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

## வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வேட்பாளர்கள்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது வாக்குகள் கணக்கெடுக்கும் இடங்களுக்கு அரசியல் கட்சிகளின் அதிகாரம் உள்ள பிரதிநிதிகளாக தேர்தலில் முன்னிற்கும் வேட்பாளர்கள் செல்ல முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு இது குறித்து அறிவுறுத்தல்கள் விடுத்திருந்தார். குறித்த சந்திப்பில் தேர்தல்கள் இடம்பெறும் மாவட்டங்களின் உதவி ஆணையாளர்கள் உட்பட, ஏனைய மாவட்டங்களின் உதவி ஆணையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர். வாக்கெண்ணும் ஸ்தானங்களுக்கு அதிகாரம் உள்ள பிரதிநிதிகள் தவிர்ந்த ஏனையோரை அனுமதிப்பதன் ஊடாக ஏற்படும் நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமாக தங்கியுள்ளோரை நாடுகடத்தி வருகின்றது சுவீடன்

(கொழும்பு)

சுவீடனில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகள் நாடு கடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.எதிர்வரும் மாதங்களில் இவ்வாறு சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு கடத்தப்படுவார்கள்.

போரைக் காரணம் காட்டி சட்டவிரோதமான முறையில் பல இலங்கையர்கள் சுவீடனில் அடைக்கலம் கோரியுள்ளனர்.சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை கட்டம் கட்டமாக நாட்டுக்கு அனுப்பி வைக்க சுவீடன் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சமாதானமான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் இதனால் அகதிகளை நாடு கடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

## புதிய விமான நிலையம் கண்டியில் அமைக்கத் திட்டம்

(கொழும்பு)



கண்டியில் புதிய விமான நிலையம் ஒன்றினை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

துரித கதியில் வளர்ச்சியடையும் சுற்றுலாப் பயணத்துறையின் மூலம் உச்சளவு நலனை பெற்றுக் கொள்ளும் பொருட்டே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சேவைகளுக்காக இவ் விமான நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ் விமான நிலையத்திற்காக பொருத்தமான இடமொன்றினை ஒதுக்கும் படி தான் அமைச்சருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகச் செய்திப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தவிர கண்டி நகரை அபிவிருத்தியடையச் செய்யும் பொருட்டு அரச 03 பில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

## ஒழுக்காற்று நடவழக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார் பைசால் காசிம்

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் விவகாரப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அக்கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் கட்சி தலைமைத்துவத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸினால் கல்முனை பிரதேசத்தில் கடந்த செப்டெம்பர் 18ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் தனது பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் பொய்யான பிரசாரத்தினை மேற்கொண்டதுடன் கட்சியின் ஒழுக்க விதிகளை மீறியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடந்த செப்டெம்பர் 19ஆம் திகதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அக்கடிதத்தில், "நான் கட்சிக்கு விரோதமாக சுயநலத்துடன் செயற்படுவதாக பொய்யான பிரசாரத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இக்கூட்டத்தில் செய்தன் மூலம் எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதுடன் கட்சியின் ஒழுக்க விதிகளையும் மீறியுள்ளார்.அத்துடன், கல்முனை மாநகர சபைத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடாமல் தனித்துப் போட்டியிட எடுத்த தீர்மானம் தவறானது எனவும் இக்கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.இதன் மூலம் கட்சி உயர் பீடத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினையும் கட்சித் தலைமைத்துவத்தினையும் அவர் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

## கடற்படைத் தலைமையகத்திற்கு இந்திய பாதுகாப்புக் குழு விஜயம்


(கொழும்பு)

இலங்கை வந்துள்ள இந்திய தேசியப் பாதுகாப்புக் கல்லூரியின் 15 பேர் அடங்கிய குழு நேற்று கடற்படைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்திருந்தது.

இக்குழுவை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க வரவேற்றார்.

மேஜர் ஜெனரல் பி.கே கொஸ்வாமியின் தலைமையிலான குழுவே இலங்கை வந்துள்ளது.

ஏழு பிரிகேடியர்கள், விமானப்படைத் தளபதி ஒருவர், ஒரு தளபதி, ஒரு பிரிகேடியர் ஜெனரல், ஒரு கப்டன், ஒரு கேணல், இரண்டு சிவில் அதிகாரிகள் அடங்கிய குழு ஒக்டோபர் ஏழாம் திகதி வரையான காலப்பகுதிவரை கற்கை நடவடிக்கைக்காக இலங்கை வரவுள்ளது.



கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை ஸ்ரீ தலதா மாளிகைக்குச்சென்று புனித தந்த வழிபாட்டில் ஈடுபட்டார். அவருடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன,எஸ்.பி. திசாநாயக்க மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

## மகனை நெருப்பால் சுட்ட தாயாருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

தனது மகனை கட்டிவைத்து அடித்து முகத்தில் நெருப்பால் சுட்ட தாயொருவருக்கு விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவினை இரத்தினபுரி பதில் நீதிபதி எம்.எஸ். ப்ரிமிகி விடுத்துள்ளார். சம்பவத்தில் 7 வயதுடைய ஆண் குழந்தைஒன்றே காயப்பட்டுள்ளது. நீதிபதி காயப்பட்ட சிறுவனை குழந்தைகளை பராமரிப்பாளர்களை பொறுப்பேற்கும் படி உத்தரவிட்டுள்ளார். இச் சிறுவனின் தந்தை குறித்த பெண்ணை கைவிட்டுச் சென்றுள்ளவேளை குறித்த பெண் வேறொரு திருமணம் செய்தவர் என்பது நீதிமன்றத்தில் தெரியவந்துள்ளது.இச் சிறுவனை அவனது தாயும், சிற்றப்பாவும் மிகவும் கொடூரமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தியுள்ளனர்.

# யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவை வெள்ளவத்தையில் புதிய தரிப்பிடம்



வெள்ளவத்தையில் உள்ள அரச உணவுக் களஞ்சியத்தினை யாழ் - கொழும்பு தனியார் பஸ் சேவைக்கான தரிப்பிடமாகப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. இப் புதிய நிலையத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறும். இந்நிகழ்விற்கு அதிசொகுசு, சொகுசு அரைச் சொகுசு உரிமையாளர்கள் நலன்விரும்பிகளைப் பங்குபற்றுமாறு குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட விசேட குழு கேட்டுக கொண்டுள்ளது.

மேலும் பொலிஸ்மா அதிபருக்கு இக்குழு பரிந்துரைக்கப்பட்ட பஸ் நிறுவனங்கள் நேர சூசியின்படி பிற்பகல் 6.30 மணி தொடக்கம் பி.ப. 9 மணிவரை அரை மணி நேரத்திற்குப் 10 பஸ்கள் என்ற விகிதம் கிரமமான முறையில் பயணிகள் சேவை மேற்கொள்ளும்.

அதேவேளை தனியார் போக்குவரத்து அமைச்சர் கௌரவ சி.பி.ரட்ணாயக்கா தேசிய போக்குவரத்து ஆணைக்குழுத் தலைவர் சசிவெலகம வழிநடத்தலுடன் கொழும்பு - யாழ்ப்பாணம், கொழும்பு - வல்வெட்டித்துறை, கொழும்பு - பருத்தித்துறை, கொழும்பு - காரைநகர், கொழும்பு - புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு சேவையை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் ஒத்திவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் நேற்று தமிழ்மிரர் இணையத்தளத்திற்கு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவடடத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையிலேயே அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இதற்கு முன்னர் கடந்த மாதம் 3 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

# புகையிலை மற்றும் மது வியாபாரிகள் சமூகப் பொறுப்புடன் செயற்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள சிறுவர்கள் மத்தியில் புகைத்தல் மற்றும் மது அருந்துதல் தொடர்பான தீய பழக்கங்கள் அதிகரித்து வருகின்றமையினால் 21 வயதிற்குட்பட்டோருக்கு மதுபானம் மற்றும் புகைத்தல் பொருட்களை விற்பனை செய்யவேண்டாம் என மதுவரி நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வர்த்தகர் ஒருவர் சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்து மதுவரி அலுவலகர்களால் கைதுசெய்யப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

சமூக நோக்கத்துடன, வியாபாரிகள் தமது வியாபாரத்தை மேற்கொள்ளவேண்டும். இளவயதினரிடையே காணப்படும் இவ்வாறான தீய பழக்கங்களினால் எதிர்காலத்தில் இளம் சமூகத்தினரிடையே நல்லதொரு சமுதாயத்தையும் நல்ல எதிர்காலத்தையும் ஆக்கக் கூடிய நிலமை உருவாக வர்த்தகர்களும், வர்த்தக நிலையங்களும் பொறுப்பாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (எஸ்)

# மரண உதவிச் சங்கம் அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் வறிய மக்கள் மரணச் சடங்குகளை மேற்கொள்வதில் உள்ள கஷ்ட நிலைமைகளைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்டு கிளிநொச்சி மாவட்ட மரண உதவிச் சங்கம் என்னும் பெயரில் புதிதாக அரசார்பற்ற நிறுவனம் ஒன்று கிளிநொச்சி நகரில் அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

இதன் தலைவராக கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி, உப தலைவர்களாக க.செல்வராசா, ஆ.ரகுநாதன் ஆகியோரும், செயலாளராக செல்வி ந.கௌந்தியும், உப செயலாளராக டாக்டர் அ.ஸ்ரீரங்கநாதனும், பொருளாளராக கோ.குணாளனும், அலுவலக இணைப்பாளராக திருமதி க.இராசலட்சுமியும் பிரதேச இணைப்பாளராக மா.குகனும் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன் ச.அசோக்குமார், ஞா.ஜீவசங்கர், இ.ராஜ்குமார், க.கணேஸ்வரன், டாக்டர் சு.விக்னேஸ்வரி ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவானார்கள்.

## மாணவியை...

பாடசாலை அதிபருக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் உத்தர விட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாணவியின் எதிர்கால நலன்கருதியே பாடசாலை நிர்வாகத்தினர் குறித்த மாணவியை விஞ்ஞான பாடம் தவிர்ந்த வேறு பாடம் ஒன்றைத் தெரிவுசெய்யுமாறு வற்புறுத்தியதாகவும், அதற்கு மறுப்புத் தெரிவித்த மாணவி பாடசாலை நிர்வாகத்திற்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததாகவும் தெரியவருகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் நிர்வாகம் மற்றும் ஆசிரியர்களும் குறித்த மாணவிக்கும் இடையில் ஏற்பட்ட மனக்கசப்பே மாணவர்களின் போராட்டத்திற்கு காரணம் எனவும் அறியவருகின்றது.

## இலங்கைக்கு...

அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவில் காணப்படுவ தாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் சூழ்ச்சிகளின் பின்னணியில் உள் நாட்டில் சுதந்திரமாக உலாவும் பிரிவினைவாத சக்திகளே இருக்கிறன. குறிப்பாக ஐ.நா.வின் நிபுணர்குழு அறிக்கைக்கு மிகவும் போலியான தகவல்களை நாட்டிற்கு எதிரான வகையில் உள்நாட்டிலிருந்தே வழங்கியுள்ளனர். இவ்வாறான தேசத்துரோக செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தவேண்டும். பயங்கரவாதத்திற்கு பிரிவினைவாதத்திற்கு துணை சென்றவர்களையும் தொடர்ந்து துணை செல்பவர்களையும் விஷேட நீதிமன்றில் போர்க்குற்றங்களின் அடிப்படையில் விசாரணை செய்யவேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## கோம்பாவில்...

பணிகள் தற்போது மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளி வாய்க்கால் மேற்கு, அம்பலவன், பொக்கணை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தமக்களே முதற்கட்டமாக குடியேற்றம் செய்யப்படவுள்ளதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## மனித உரிமை...

அபிவிருத்திகள் ஏற்பட்டுவருகின்றது. ஏராளமானோர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள புலிகளின் உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெற்று விடுதலை அடைந்துள்ளனர். அரசின் தீர்விற்கு பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, நாட்டின் முன்னெடுப்புகள் பற்றி சர்வதேசத்திற்கு தெளிவுபடுத்த வேண்டும். எமக்கு எதிராக செயற்படும் நாடுகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமை அமர்வை குறிவைத்து திட்டங்களை வகுத்து வருகின்றன. இந்நாடுகளுக்கு உண்மை நிலையை புரியவைக்கவேண்டும் என மேலும் கூறினார்.

## தென்மராட்சியில்...

தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவாகவும் சாவக்கச்சேரியை மையமாக வைத்து தென்மராட்சி பிரதேச செயலக பிரிவாகவும் பிரிப்பதற்கு அம்மக்கள் விடும் கோரிக்கை நியாயமானது.

எனவே இந்த இடத்தில் மாற்று அரசியல் கருத்துக்கொண்டவர்கள் இருப்பினும் இந்த விட யத்தில் அவர்களும் ஒத்துழைப்பாகள் என்றும் இதில் இங்குகலந்து கொண்டிருக்கின்ற த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களும் இதனை ஏற்றுக்கொள்வார் என தான் நம்புவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தபோது கருத்து தெரிவித்த த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் கருத்தை தானும் ஏற்றுக்கொள்வதாகவும் இரண்டு பிரதேச செயலக பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு தாமும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தெடர்ந்து கருத்து தெரிவித்த சந்திரகுமார் யாழ்ப்பாணம் நான்கு வலயங்களாக பிரிக்கப்பட்டுளளது ஆதாவது தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி இதில் தீவகத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளும் வலிகாமத்தில் ஏழு பிரதேச செயலக பிரிவுகளும் வடமராட்சியில் மூன்று பிரதேச செயலக பிரிவுகளும் காணப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பைக் கொண்டதும் அறுபது கிராம அலுவலர் பிரிவுகளை கொண்டதுமான தென்மராட்சியில் தென்மராட்சி பிரதேச செயலக பிரிவு என்று ஒன்று மாத்திரமே உள்ளது. இது அனைத்து அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் திணைக்களங்களினதும் நிர்வாக ரீதியான செயற்பாட்டிற்கு பெரும் சிரமங்களை ஏற்படுத்தும் ஒன்றாக உள்ளது.

எனவேதான் 28 கிராம அலு வலர் பிரிவுகளை உள்ளடக்கி தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவாகவும் 32 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி தென்மராட்சி பிரதேச செயலக பிரிவாகவும் பிரிக்கவேண்டும என்ற அந்த மக்களின் நியாயமான கோரிக்கையினை நிறைவேற்ற நாம் அனைவரும் ஒருமித்து செயற்பட வேண்டும்.மேலும் இந்த விடயத்தை ஏற்கெனவே கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொது நிர்வாக உளநாட்டு அலுவல்கள் அமைச்சின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர்களான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சரவணபவன், யாழ்மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன், கிராம அலுவலர்கள் தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியம், கொடிகாமம் வர்த்தக சங்கம் மற்றும் பிரதேச மக்கள் அமைப்புகள் கலந்துகொண்டன.

# சைக்கிள் திருட்டைத் தடுக்க வைத்தியசாலையில் புதிய உத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் வைத்தியசாலையைச் சார்ந்தவர்கள் தவிர வேறு எவரும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்கள் நிறுத்திவைப்பதற்கு யாழ். வைத்தியசாலை நிர்வாகத்தினால் தடையுத்தரவு கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இவ்விடயம் தொடர்பாக வைததியசாலை வளாகத்தில் நிர்வாகத்தினரினால் அறிவித்தல்களும் ஒட்டப்பட்டிருக்கின்றது. வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகஸ்தரகளையும் இவ்விடயத்தில் இறுக்கமாகச் செயற்படுமாறும் பணிக்கப்பட்டிருக்கிறது. வைத்தியசாலை வளாகத்தில் இடப்பற்றாக்குறை மற்றும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் களவுச் சம்பவங்களின பின்னணியிலேயே வைத்தியசாலை நிரவாகத்தினரால் இத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என தெரியவருகின்றது.

நேற்றைய தினம் முதல் இந் நடைமுறை பிறப்பிக்கப்பட்டு வருவதனை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு வந்திருந்த பலர் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்ததனை அவதானிக்க முடிகின்றது. (பா)

## செய்திப்பாணம்

**சட்டம்தண் டிக்காவிடின் சரிப்பேன் கிறிஸ்மனிதத்**
**துட்டர்களை அரசஅம்மை துணிந்தார் - பட்டறிவு**
**பெண்களுக்கே வராக்கிப் போரதனால் வீழ்ந்தான்**
**தண்டனைக்குரி நரகாசூரன் தாம்!**



# தலைமைச் செயலக உரிமை யாருக்கு ஜே.வி.பி.க்குள் வலுக்கிறது நெருக்கடி

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் தலைமைச் செயலகத்தின் உரிமை தொடர்பில் அக்கட்சியைச் சேர்ந்த சோமவன்ச மற்றும் குமாரகுணரட்னம் ஆகியோருக்கு இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாக்குவாதங்களைத் தொடர்ந்து இவ்விரு தரப்பினருக்கும் இடையிலான பிளவு புதிய திருப்பத்தை அடைந்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து வெளியிட்டுள்ள The nation பத்திரிகை, ஜே.வி.பி.யின் அரசியல் செயற்பாடுகளின் போது உபயோகப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மீது சட்ட ரீதியிலான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சோமவன்ச தரப்பினர் வழக்கறிஞர்களுடன் ஆலோசனை நடாத்தி வருவதாக தெரிவித்துள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் ஜே.வி.பி.யின் உறுப்பினர்கள் மற்றும் அக்கட்சியின் கிளைகள் சேகரித்த நிதியிலிருந்து இக்கட்சியின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள மூன்றுமாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், ஜே.வி.பி.யின் தலைமைச் செயலகம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டடத்திற்கான உறுதிப் பத்திரத்தில் குமாரகுணரட்னம் தரப்பிலுள்ள மடநாயக்கா என்பவரின் பெயரே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரத்தின் உரிமத்தை தனது பெயருக்கு மாற்றித் தருமாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மடநாயக்காவிடம் கேட்டதாகவும், ஆனால் ரில்வின் சில்வாவின கோரிக்கையை மடநாயக்கா நிராகரித்துள்ளதாக அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

அத்துடன், இக்காணிப் பத்திரம் கட்சித் தலைவர்களில் யாருககுச் சொந்தமாக இருக்க வேண்டும் என சட்ட ரீதியாக முடிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களிடம் இக்காணியின் உரிமத்தைக் கைமாற்றிக் கொடுப்பதாக ரில்வின் சில்வாவுக்கு மடநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தலைமைச் செயலகத்தை சொந்தமாக்குவது தொடர்பில் அக்கட்சியின் இரு தரப்பினரின் ஆதரவாளர்களுக்கும் இடையில் போட்டி இடம்பெற்றுவருகின்றது. இது குறித்து இதுவரை சரியான தீர்வு காணப்படவில்லை.

அதேவேளை, ஜே.வி.பி.யின் இணையத்தளமான Lankatruth இணையத்தளத்தை குமாரகுணரட்னம் தரப்பினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். இதில் சோமவன்ச தரப்புடன் தொடர்புபட்ட செய்திகள அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளன.

இந்த இணையத்தளத்திற்கு வழங்கப்பட்டுள்ள கடவுச் சொல் குமார குணரடனவின் ஆதரவாளர் ஒருவருக்கே தெரிந்துள்ள நிலையில், அவர்களால் இந்த இணையத்தளத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த முடிவதாக ஜே.வி.பி வட்டாரங்கள் மேலும்

# பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர் குறித்து முறைப்பாடு

(கொழும்பு)

பிள்ளைகளால் கைவிடப்படும் பெற்றோர்கள் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக முதியோருக்கான தேசிய செயலகம் குறிப்பிடுகின்றது.

அவ்வாறான நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார். அந்தவகையில் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர் தொடர்பில் முதியோர் பராமரிப்பு சபைக்கு விண்ணப்பங்களை சமர்பிக்க முடியும்.

முதியோர் பராமரிப்பு சபையினால் குறித்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் ஜே.கிருஷ்ணமூர்த்தி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விண்ணப்பங்களை முதியோருக்கான தேசிய செயலகம் மற்றும் பிரதேசசபைகள் ஊடாக பெற்றுக்கொள்ளமுடியும்

# இனவாத கொள்கைகளை கூட்டமைப்பு கைவிட வேண்டும்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன

(கொழும்பு)

புலிகளுக்கு ஆதரவாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது இனவாத கொள்கைகளைக் கைவிட்டு வெளியில் வரவேண்டியது அவசியமானதென பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான நிபுணர் பேராசிரியர் ரொஹான் குணரட்ன கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, தமிழ் மக்கள் முன்மாதிரியாகக் கொள்ளக்கூடாது.

தமிழர்களின் சிந்தனைகளில் சிலர் விஷம் தூவி வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளை இல்லாதொழிக்க அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் விடுதலைப்புலி தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் புலம்பெயர் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் நாட்டுக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக உருத்ரகுமாரன், நெடியவன், இமானுவேல் மற்றும் விநாயகமூர்த்தி போன்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்குலக நாடுகள் இலங்கையை விமர்சனம் செய்வதனை விடவும் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கு என்ற பேதமின்றி நாட்டின் சகல தரப்பினரும் சகோதரர்களைப் போன்று வாழ வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

# மோதர கான்ஸ்டபிள் கொலை கைதான சந்தேக நபர் மரணம்

மொரட்டுவ பொலிஸ் பிரிவில் மோதர பகுதியில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்கள் ஐவரை கைது செய்துள்ளனர்.

மோதரை பிரதேசத்தைச் சேர்ந்த நால்வரும் ரட்டியலகொட பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை மேற்கொண்டு அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவலின்படி கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட வாள் மற்றும் கத்தி என்பவற்றைக் கொல்கொட கங்கைப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களை மீட்டெடுத்த மோதர பொலிஸ் நிலையக் குழு விலங்கு பூட்டிய நிலையில் சந்தேகநபர் ஒருவரை அழைத்துக் கொண்டு படகில் திரும்பி வந்து கொண்டிருந்தபோது சந்தேகநபர் இரு கைகளாலும் பொலிஸாரை நோக்கி தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன்போது ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கங்கையில் விழுந்ததுடன் சந்தேகநபரும் கங்கையில் குதித்துவிட்டார்.

உடன் செயற்பட்ட பொலிஸ் குழு பொலிஸ் கான்ஸ்டபிளையும் சந்தேகநபரையும் காப்பாற்றியுள்ளது.

சந்தேகநபர் உடனடியாகப் பாணந்துறை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற போது அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பாணந்துறை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மோதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுவர் தினத்தில் 18 துஷ்பிரயோகம்

உலக சிறுவர் தினமான ஒக்டோபர் 01 ஆம் திகதி அன்று மட்டும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெற்ற சித்திரவதை மற்றும் வன்முறைகள் தொடர்பாக 18 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இம் முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சிறுவர் உதவி சேவை இலக்கமான 1929 இற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இம் முறைப்பாடுகளில் 10 முறைப்பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான சித்திரவதையுடன் தொடர்புபட்டவை.

ஏனைய முறைப்பாடுகள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் மற்றும் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புபட்டவையாகும்.

இச் சிறுவர் உதவி சேவைக்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 10 முறைப்பாடுகள் கிடைப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதில் பெரும்பாலானவை சிறுவர்களால் முன்வைக்கப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.

# 66 ஆவது இடத்தில் இலங்கை

உலகளாவிய ரீதியில் கணனி அறிவுடையோரார் அதிகம் வசிக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கை 66 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதாவும் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் நிமால் ஆனந்த அத்துக்கோரள குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் 5 சதவீதத்தினரே கணினி அறிவுடையோராக இருந்தனர். தற்போது இது 35 சதவீதமாகும்.

# அரச நிலங்கள் குத்தகைக்கு

அரசுக்கு சொந்தமான 2000 ஏக்கர் நிலப்பரப்பை நீண்டகால குத்தகை அடிப்படையில் 11 நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு, மாத்தளை, திருகோணமலை, புத்தளம், நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களில் உள்ள நிலப்பரப்புக்களே இவ்வாறு குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன.

சுற்றுலா, விவசாய, நீர்மின் சார நிலையம், மின்சக்தி மற்றும் உப்புத்தளங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்காக இவ் இடங்கள் வழங்கப்படவுள்ளது.

ஒரு வருட, 50 வருட மற்றும் 30 வருட குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த நிலப்பரப்புகள் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் உள்ளார்ந்த செய்திப்பிரிவு தெரிவித்துள்ளது.

# சுகாதாரத் துறைக்கான நிதியில் குறைப்புச் செய்யப்படமாட்டாது

வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறைக்கப் போவதில்லை. மாறாக சுகாதாரத் துறையை மேம்படுத்தி பொது மக்களுக்கு தேவையான அதிநவீன சேவையை வழங்குவதே அரசின் நோக்கம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி ஆதார வைத்தியசாலையில் சிறுநீரக சார் நோய்கள் தொடர்பாக விசேட சேவைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பணித்துள்ளதுடன் வைத்தியசாலையில் குறைபாடுகள் தொடர்பிலும் கண்டறிந்துள்ளார்.

கண்டி ஆதார வைத்தியசாலையை நேற்று முன்தினம் பார்வையிட்ட ஜனாதிபதி அங்கு விசேட சந்திப்புகளையும் மேற்கொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு ஜனாதிபதி தொடர்ந்தும் கூறுகையில், அரசாங்கம் கடந்த ஆண்டில் 90 பில்லியன் ரூபாவை வரவு செலவுத்திட்டத்தில் சுகாதார துறைக்காக ஒதுக்கியது. அதேபோன்றுதான் எதிர்வரும் காலங்களிலும் சுகாதாரத் துறையை மேலும் மேம்படுத்து வதற்கு அரசு கூடுதலான நிதியை ஒதுக்கும் அதேபோன்று சுகாதார துறைசார் அனைத்து ஊழியர்களும் பொது மக்களின் நலன் கருதி பங்களிப்புடன் செயற்பட வேண்டும்.

கண்டி ஆதார வைத்தியசாலைக்கு சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்களை ஆராய்வதற்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படும். அதேபோன்று அந்நோய் தொடர்பாக விசேட ஆய்வுகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

# சிறுமி மீது துஷ்பிரயோகம் பிரதம பிக்கு மாட்டினார்

(கொழும்பு)

அக்குறணை பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் பிரதம பிக்கு ஏழுவயதுச் சிறுமி மீது பாலியல் பலாத்காரம் புரிந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விகாரைக்கு மதவகுப்புக்கு சென்ற 7 வயது சிறுமி மீது அந்த விகாரைக்கு பொறுப்பாக இருக்கும் 28 வயது பிக்கு பாலியல் பலாத்காரம் புரிந்துள்ளார்.

இச்சிறுமி இது தொடர்பாக பெற்றோருடன் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து புத்த பிக்கு கைது செய்யப்பட்டு மாத்தறை நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார்.

இவரை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

புத்த மதம் இலங்கையின் அரச மதமாகும். இலங்கையின் அரச மதமான புத்த மத பிக்குகள் பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒக்டோபர் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.